# தமிழமுது

கௌரவ ஆசிரியர் : சரவணையூர் மணிசேகரன்



இலக்கிய இதழ்

விலை சதம் —/50

## தமிழமுதுக்கு எமது வாழ்த்துக்கள்

சுறு சுறுப்பாயிரு—ஆனல் படபடப்பாய் இராதே.
பொறுமையாகவிரு—ஆனல் சோம்பேறியாக இராதே.
சிக்கனமாகவிரு—ஆனல் கருமியாக இராதே.
அன்பாயிரு—ஆனல் அடிமையாய் இராதே.
இரக்கம் காட்டு—ஆனல் ஏமாந்து போகாதே.
கொடையாளியாய் இரு—ஆனல் ஓட்டாண்டியாய் இராதே.
வீரனய் இரு—ஆனல் போக்கிரியாய் இராதே.
இல்லறத்தை நடத்து—ஆனல் காமவெறியனய் இராதே.
பற்றற்று இரு—ஆனல் காட்டுக்குப் போய்விடாதே.
நல்லோரை நாடு—ஆனல் அல்லோரை வெறுக்காதே.

* * *

**திருமணமா? சடங்குகளா? எவ்விதமான வைபவங்கள் என்றலும், நாம் குறித்த நேரத்தில் சிறந்த முறையில் சிற்றுண்டி வகைகள் தயாரித்துக் கொடுப்போம்.**

எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்

# மலர் கபே

இல: 8, பெப்டிச்சபல்ஸ் றேட்,
(கண் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில்)
கொழும்பு-7.

கல்யாண வைபவங்களுக்கேற்ற விதம்விதமான புடவைத் தினுசுகளும், சேட்டிங், சூட்டிங் வகைகளும் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்! ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!

**சீப் சைட்**

இல, 90, 2ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

With the Best Compliments

**Rohini Trading & Co.,**
(Hardware Import Merchants & Govt Suppliers)

117, Messenger Street,
COLOMBO - 12.

Telephone: 28326.

With the Best Compliments

**Yosa Hardware Stores**

(Hardware Merchant)

**16, Mayfield Road,**

**Colombo - 13.**

தமிழமுதுக்கு எனது நல்வாழ்த்துக்கள்

**மூ. மார்க்கண்டு**

சரவணை

**வேலணை**

'தமிழுக்கும் அமுதென்று பேர்—அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!'

| தமிழ் 1. | ஐப்பசி, கார்த்திகை, மார்கழி—1970 | அமுது 3. |
|---|---|---|

அட்டைப் படம்

அ. ந. கந்தசாமி

**தமிழமுது இலக்கியக்குழு**

சரவணையூர் மணிசேகரன்
த. சிறீனிவாசன்
பா. சிவபாலன்
கு. கணேசலிங்கம்
ஆ. குணநாயகம்
பா. சிவகடாட்சம்
சி. கணேசலிங்கம்
எஸ். துரைமகாலிங்கன்
இ. ச. கோபாலபிள்ளை

தமிழமுதில் வெளிவரும் கதைகளிலுள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. கட்டுரைகளில் வெளிவரும் கருத்துக்களுக்கு கட்டுரை எழுதியவர்களே பொறுப்பாளிகளாவர். ஆ—ர்.

## இவ்வமுதில்....

தலையங்கம்
டாக்டர் ஆதிஷேசையா
மலரன்பன்
அ.ந. கந்தசாமி
கே. எஸ். சிவகுமாரன்
முருகையன்
பொ. பத்மநாதன்
பண்டிதரத்தினம் சாமுவேல்
சானா
எஸ்.எம். கமாலுத்தீன்
சரவணையூர் மணிசேகரன்
அலன்சன் பியதாச
செங்கை ஆழியான்

# இதயம் பேசுகிறது!

**தீபத்தில்...**

*...தரமான இலக்கிய இதழ்கள் இரண்டொன்றே இங்கு வெளியாகின்றன. வளர்ந்து வரும் எழுத்தாளர் சரவணையூர் மணிசேகரன் அவர்கள் "தமிழமுது" என்ற காலாண்டுச் சஞ்சிகை ஒன்றை வெளியிட்டுள்ளார்.*

—யாழ்வாசி.

**தினகரனில்...**

*...முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளின் படத்தை முகப்பில் தாங்கி வெளி வந்திருக்கும் இவ்விதழ் இலக்கியத்தரமிக்கது.*

—தசரதன்.

**வீரகேசரியில்...**

*...நல்ல பல எழுத்தாளர்களிடமிருந்து படைப்புக்களைப் பெற்று மிகத் தரமாக தமிழமுது வெளியிட வேண்டுமென வாசகர் பேரவையினர் முயல்வது தெரிகின்றது. வாசகர்களும் எழுத்தாளர்களும் இவ்விளைஞர்களின் முயற்சிக்கு பேராதரவு நல்க முன்வருவது இன்றியமையாதது. அவர்கள் பணி சிறக்க நம் வாழ்த்துக்கள்.*

—சேனு

**மலரில்...**

*...கொழும்பு வாசகர் பேரவையினர் வெளியிட்டுள்ள தமிழமுது என்னும் இலக்கிய ஏடு நம் பீக்கையை ஏற்படுத்தியுள்ளது.*

*முதலிதலிலேயே ஈழத்துப் பிரபல எழுத்தாளர்கள் பலரது படைப்புக்கள் இடம் பெற்றுள்ளன.*

**வாசகர்கள்...**

*...தமிழமுது இதழைப் பார்த்தேன். இவ்விதழில் இடம் பெற்றிருந்த சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், மற்றும் விடயங்கள் அத்தனையும் நன்கு சுவை அளிப்பனவாகவே உள்ளன.*

அ. கனகசூரியர், சுன்னாகம்.

## — திருமணம் —



தமிழமுது இலக்கியக் குழுவின் அங்கத்தவரும் பொரளை வை. எம். பீ. ஏ. நிறுவனத்தில் கடமை ஆற்றுபவரும் பிரபல நகை வியாபாரி மு. சின்னத்துரையின் சிரேஷ்ட புதல்வருமான

செல்வன் **சி. மகாலிங்கம்** அவர்களுக்கும் சரவணையூரைச் சேர்ந்த த. பாலசிங்கத்தின் சிரேஷ்ட புத்திரியான தற்பராதேவிக்கும் 19-10-70 அன்று திருமணம் நடைபெற்றது. மணமக்களை தமிழமுது பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்க என வாழ்த்துகின்றது. ஆ—ர்.

அன்பளிப்பு;

க. சோமசேகரம்
(சரவணையூர் மணிசேகரன்)

# அ. ந. க. வும், அவர் சிருஷ்டிகளும்

அவர் சாகும் போதும் இலக்கியப் பெருமூச்சு விட்டுத்தான் இறந்தார்.

அவரைச் சந்திக்கப் போனால் எந்த நேரமும் எங்களோடு பேசிக்கொள்வது தமிழ் இலக்கியம்தான்.

அவர் தமிழ் இலக்கியத்துக்காக தன் உடல் பொருள் ஆவி அத்தனையும் அர்ப் பணித்தார்.

அவர் கூறிய வார்த்தைகள் அன்றுபோல் இன்றும் காதுகளில் ரீங்காரிக்கின் றன.

'களனி வெள்ளம்' தினகரனில் தொடராக எழுதப்போகிறேன், மனக்கண் வாசிக்கின்றீர்களா?... மதமாற்றம் பார்த்திருக்கிறீரா?... படைப்பாளிக்குத் தான்பெற்ற குழந்தைகள் 'பொன் குஞ்சுகளாகத்தானிருக்கும். உண்மையி லேயே எனக்காகச் சொல்லாது, உங்களுடைய அபிப்பிராயம் என்ன?... அவர் கூறிய வார்த்தைகள் காற்றோடு காற்றாகப் போகாது, இன்னும் காதுகளில் வந்து ஒலிக்கின்றன,

அதற்கிடையில் வெள்ளை, சிவப்பு நிறக் குழிகைகளை சின்னக்குழந்தைகள் இனிப்பு போடுவது போன்று போட்டுக் கொள்கின்றார்.

இவைகள் தான் அவர் உயிரை நீண்ட நாட்கள் பிடித்து வைத்திருந்தன.

ஏ குளிகைகளே! சமூகத்துக்காக அவர் சிருஷ்டித்தவர். அவர் சிருஷ்டிகளை புத்தக உருவில் கொண்டு வர முயற்சிக்காத இந்த நன்றி கெட்ட சமூகம் போலவா, நீ அவர் உயிரைப் பிடித்து வைக்காது துரோகம் செய்துவிட்டாய். 'தமிழமுது' அழுகின்றாள். அவள் கண்களில் நீர் துளிர்க்கின்றது. அவர் படத்தை (அமரர் அ.ந. கந்தசாமி) முகப்பில் தாங்கிய பின்புதான் அவள் மனம் கொஞ்சம் சாந்தியடைகின்றது.

# வடக்கிலிருந்து வந்த

# இலக்கியக் கடிதம்

வடக்கில் இலக்கியக் கருத்தரங்குகள், புத்தக வெளியீடுகள் புரிந்து இலக்கியத்தில் ஒரு சாதனையை நிகழ்த்துபவர்கள் என்றால் அது, யாழ் இலக்கிய வட்டத்தினரையே சாரும். அவ்விலக்கிய வட்டத்தின் சார்பில் ''ஈழநாடு'' நடாத்திய நாவல் போட்டியில் பரிசு பெற்ற பிரபல எழுத்தாளர்களான செங்கை ஆழயான், இராஜநாயகன் ஆகியோரைக் கௌரவித்து கவிஞர் வி. கந்தவனம் தலைமையில் அண்மையில் ஒரு பாரட்டுவிழா நடைபெற்றது.

விழாவெடுத்துக் கௌரவிப்பது மாத்திரமன்று, பொன்னாடை போர்த்தல், பொற்கிழி வழங்கும் மரபு, தொன்று தொட்டு எம்மிடையே வழங்கி வருகின்றது. 'எங்கே போகின்றாய்' என்று ஒரு நோயாளியைக் கேட்டால், 'சில்லாலைக்கு' என்று பதில் வரும். அந்தக் கிராமத்தோடு தன் பெயரையும் இணைத்து எழுத்துலகில் இருபத்தைந்து வருடகாலச் சாதனைகள் புரிந்தவரான கவிஞரும், பிரபல விமர்சகருமான திரு. சில்லையூர் செல்வராசனுக்கு அண்மையில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து விழா எடுத்தனர்.

அடிக்கடி இலவசமாக தமிழ்விழா, பாராட்டு விழா என்று பார்த்து வந்த எங்களுக்கு, பணம் கொடுத்துப் பார்க்கும் நாடகத்தையே இலவசமாக பார்த்து வைக்க சந்தர்ப்பம் அளித்தவர்கள் 'நிழல்' பத்திரிகைக் குழுவினராகும். அவர்கள் தங்கள் இரண்டாவது நாடக விழாவை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அரங்கேற்றினார்கள். நல்ல தரமான நாடகங்கள் யாழ். மக்கள் அண்மையில் பார்த்துப் பூரித்தனர் எனலாம்.

'நாடகமேதான் என் உயிர் மூச்சு' என்று வாழ்ந்து வரும் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் தமது விவாகப் பொன்விழாவை மானிப்பாயில் அமைதியாகக் கொண்டாடினார். எழுத்தாளர்களும், கலைஞர்களும் நேரில் வந்து பாராட்டுக்கள் தெரிவித்தனர். அப்போது ''யாழ்ப்பாணத்திலுள்ள சகல நாடக மன்றங்களையும் ஒருக்கிணைத்து நாடகக் கலையை வளர்ப்பதற்காக நாடகக் கலை நிறுவனம் ஒன்று ஆரம்பிக்க வேண்டும்'' என்று கலையரசு தமது விவாகப் பொன்விழாவில் வேண்டுகோள் விடுத்தார்.

அந்தப் பெரியாரின் ஆசையைப் பூர்த்தி செய்வதற்கு நமது கலைஞர்கள், ரசிகர்கள் முன்வருவாராக......

**மகரம்**

பாரீஸ் மகாநாட்டில் சமர்ப்பித்த கட்டுரை

# தத்துவஞானமும் கலையும்

## சங்கமிக்கும் பாதையில்...

(டாக்டர் மல்கம் சத்தியானந்தன் ஆதிஷேசையா எம்.ஏ., பி.எச்.டி, யுனஸ்கோ பதில்நெறியாளர்)

இந்த மகாநாட்டிலே முதற்கண் கவனம் செலுத்தப்படும் பொருட்களில் தமிழ் மொழி, இலக்கியம் இவை இடம்பெற்றிருப்பது மிகப் பொருத்தமாகும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அழியாமல் குறையாமல் நிலைத்திருக்கும் தமிழ் மொழியே தமிழ் மக்களின் இடையருத தொடர்ச்சிக்கும் பெரிதும் காரணமாகும். கற்றோர் கவனத்தைக் கவர்ந்த மற்றொரு தனிச் சிறப்பும் இம் மொழிக்கு உண்டு. இது சமுதாயத்தின் சிறப்பு மொழியாக மதம், கல்வி போன்ற துறைகளுக்கு மட்டும் பயன்படவில்லை. மக்களின் அன்றாட வாழ்வோடு இரண்டறக் கலந்து ஜீவ சக்தியுடன் இன்றும் விளங்குகிறது.

தமிழ்ப் பெருமக்களின் நாகரீகத்தில் இரு விசேஷ இயல்புகள் உண்டு. இவையே அவர்கள் மொழிப்பற்றுக்குக் காரணம் கூறுகின்றன. ஒன்று சங்கம் நிறுவியது. அன்று உருவான இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் என்றே கூறப்பட்டன. மற்றொன்று, தொல்காப்பியம் போன்ற விரிவான நுட்பமான இலக்கண நூல்கள் அக்காலத்திலேயே வழக்கிலிருந்தது. இவ்வாறு ஒரு கலாச்சாரத்தின் தொடர்ச்சிக்கு மிகச் சக்தி வாய்ந்த சாதனங்களாக இரண்டு அம்சங்களும்—அதாவது மொழிவ்வளர்க்கும் சங்கங்களும், அந்த வளர்ச்சி முறையோடு அமைவதற்கான இலக்கணங்களும் - தொன்மையான தமிழ் சரித்திரத்தின் ஆரம்ப ஏடுகளிலேயே ஆழமாகப் பதிந்து விட்டன.

இருப்பினும், இந்த உலகத் தமிழ் மகா நாடு சொல்லையும் எழுத்தையும் மாத்திரம் முக்கியமாகக் கருதவில்லை. தென்னிந்தியக் கலாச்சாரத்தின் சின்னங்களான நிர்மாணக்கலை, மற்றும் சிற்பம், சித்திரம் போன்ற எழில் கலைகளும் இங்கு தகுந்த இடம் பெற்றன. பல துறையினர் கூட நடாத்தும் இம் மகாநாட்டின் பிரிவுகளில் முதல் முறையாக புதை பொருள் ஆராச்சிக்கும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பழங்குடி மக்களான திராவிடரின் நாகரீகமே இந்

திய உபகண்டத்தின் நாகரிகத்துக்கு முன்னோடி என்பது ஆராச்சியாளர் கருத்து. சிந்துநதிப் பள்ளத்தாக்கில் அகழ்ந்தெடுக்கப்பட்ட புதை பொருள் சின்னங்கள் இக் கருத்துக்குப்புதிய ஆதரவுஅளித்தன. பிறகு (கம்போடியா நாட்டில்) கிமர் கட்டிடக் கலையில், அண்டத்தின் சின்னமாகக் கருதப்படும் மலை வடிவக் கோயில்களைக் காண்கிறோம். சிந்து நதியிலிருந்து கம்போடியா வரை-தமிழ்க் கலாச்சாரம் விரிந்து பரந்தது, காலத்தால் கரையாது விளங்கியதற்குச் சான்றாக பல சின்னங்கள் வரிசை வரிசையாக அணிவகுத்து நிற்கின்றன. ஸ்ரீரங்கம் ரங்கநாதர் ஆலயம், ராமேஸ்வரம் கோயில் முதற் கொண்டு பல தென்னிந்தியக் கலைச் சின்னங்களை பாதுகாக்கும் நீண்டகாலத்திட்டத்தில் யுனெஸ்கோ ஸ்தாபனம் ஒத்துழைக்கிறது.

இத்துறையிலும் நிர்மாணக் கலைபற்றிய பல தொன்மையான நூல்கள் சிற்பசாஸ்த்திரத்துள் அடங்கியுள்ளன. இவை மானஸார, மாயமாதா, போன்ற ஆகம நூல்களைச் சேர்ந்தவை. தமிழரின் கோயில் கட்டும் கலைபற்றியும், அவர்கள் கையாண்ட நகர அமைப்பு பற்றியும், இவற்றிலிருந்து இன்றைய மாணவர் அறிந்து கொள்ளலாம்.

இதே ஆன்மீக உட்பொருளையே சிற்பக்கலையிலும் காண்கிறோம். சைவத்தைத் தழுவிய பல மஹா புருஷர்கள் எவ்வுயிர்க்கும் பொதுவான பரம்பொருளைப்பற்றித் தங்கள் உணர்ச்சிகளை, கவிதை வடிவிலே அளித்திருக்கிறார்கள். இதற்கு இணையாக தென்னிந்திய வெண்கலச் சிற்பங்களில் பெரிதும் காணப்படும் நடராசர் சிற்பம், மனித குலத்தின் மாபெரும் கலைச் சின்னங்களில் ஒன்றாகவே அமைந்துவிட்டது. இது சிவபெருமானின் மற்றொரு வடிவமாகும். அந்த ஆடலரசன் உருவத்திலே உயிரும் உயிரின்மையும் ஒன்றே. ரூபமும் அரூபமும் ஒன்றே: அமைதியும் அசைவும் ஒன்றே. அந்த ஆனந்தத் தாண்டவத்தில் உடலும் ஆவியும் இரண்டறக் கலந்து விட்டது என்கிறார் ஆனந்த குமாரசாமி. இவர் இலங்கையைச் சேர்ந்த புகழ் பெற்ற சரித்திர ஆசிரியரும் கலாவிமர்சகரும் ஆவார். ரி. எஸ். எலியட்டின் கவிதைவிலே நான் நடராஜப் பெருமானின் இதே வடிவைக் காண்கிறேன். அதன் பொழிப்புரை பின்வருமாறு;-

> ''சுழல்கின்ற இடத்தில் சுழலாத ஒரு இடம். ஊனுமில்லை ஊன் இல்லாமலுமில்லை. அதிலிருந்துமில்லை அதை நோக்கியுமில்லை. அந்த அசைவற்ற இடத்தில் நடனமுண்டு, ஆனால் அங்கு தடையுமில்லை அசைவுமில்லை. அதை நிலையானதென்று நினைக்க வேண்டாம், இறந்த காலமும் வருங்காலமும் ஒருங்கே இணைந்து சேரும் இடத்தில் ...அந்த அசைவற்ற இடத்தைத் தவிர, நடனமே இல்லை, நடனம் மட்டுமே உண்டு.''

ஆன்மீக அறிவுடை நிலைக்கும், நன்நெறியில் அமையும் வாழ்க்கை அனுபவத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பு, தமிழ்க் கலாச்சாரத்தின் அடிப்படைப்பண்பாடு என்பது பலரும் அறிந்த உண்மை. உலக சக்தியையும், வாழ்க்கையில் உறுதியான தன் நம்பிக்கையையும் குறளிலே கண்டார் டாக்டர் ஆலபர்ட் ஸ்வெட்ஜர். இலக்கியத் தத்துவம் இவற்றில் தனிச் சிறப்புடன் விளங்கும் இந்தப் புராதன நூல், எளிய நீதி நெறியின் வழியே இயங்கும் மனித இனத்தையே இலட்சியமாகச் சித்தரிக்கிறது என்று அவர் கூறுகிறார்.

இந்திய நாகரிகத்தில் தமிழ் மக்களின் பங்கும் இந்த மகாநாட்டில் விவாதிக்கப்படும். குறிப்பாக சமஸ்கிருத மொழியோடு இதன் தொடர்பும் ஆராயப்படும். இதுவரை திராவிடர்களைப்பற்றிய ஆராய்ச்சி கவனிக்கப்படாமல் இருந்தது. இன்று பெரும்பாலும் இணைத்தே ஸமஸ்கிருத மொழி ஆராச்சியைப் புதுப்பிக்க சொற்பொழிவுகளும், விவாதங்களும் இப் பொருள் பற்றிப் புதிய கருத்துக்களை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

இருப்பினும் தமிழ்க் கலாச்சாரத்தின் தனிச் சிறப்புக்களைப் பற்றியோ அல்லது பொதுவாக அது இந்திய கலாசாரத்தின் ஒரு அங்கம் என்பது பற்றியோ, ஆராய்வதோடு இந்த மகாநாட்டின் நோக்கம் முழுமை பெறாது. வெளிநாடுகளுடன் தமிழ் நாடும், தமிழ் மக்களும் கொண்டிருந்த உறவு இங்கு விவாதத்திற்குரிய மிக முக்கியமான பொருளாகும். தமிழாராய்ச்சி என்பது உண்மையாகவே ஒரு சர்வதேச என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. அவற்றில் சில:-

1. தமிழர் நாகரிகம் கடல் கடந்து இந்தோனேஷியா, மலேஷியா, பிலிப்பைன்ஸ் முதலிய தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குப் பரவியது.

2. சீன தேசத்தில் புதை பொருள் ஆராய்ச்சி ஸ்தலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்கள்.

3. பர்மா, கம்பொடியா, தாய்லாந்து நாடுகளில் நடைமுறையில் காணப்படும் விழாக்கள், சடங்குகள்

4. இந்தியப் பெருங்கடல் மூலம் நடத்தப்பட்ட வாணிபத்தைப் பற்றிய ஆராய்ச்சி, கிழக்கு ஆபிரிக்காவின் சரித்திரத்திற்கான மூலாதாரங்களில் ஒன்றாக இருத்தல்.

விரிந்து பரந்த இந்த ஆதிக்கத்திற்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. அது அதன் பூரண சமாதான இயல்பு ஆகும். அநேகமாக சரித்திரத்தில் வேறு எந்த நாகரிகமும் கத்தியின்றி இரத்தமின்றி முழுமையும், வாணிபம் கலாசாரம் இவை மூலமாகவே, தனது செல்வாக்கை இவ்வளவு தூரம் பரப்பியதில்லை. ஆங்காங்கு உள்ள பண்பாடுகளோடு தமிழ்ப் பண்பாடு நன்கு ஒன்றிணைந்தது. மனம் திறந்து நிறைந்த இந்த சர்வதேசத் தொடர்பின் அஸ்திவாரம், கடல் கடந்த வாணிபம் மாத்திரமல்ல—தமிழனின் ஆழ்ந்த இதய பூர்வமான மனிதாபிமானம் என்றே கூறவேண்டும். இதையே ஒரு தமிழ்ப்புலவர் **''யாதும் ஊரே யாவரும் கேளிர்''** என்று கூறுகிறார்.

அகில உலகத்திற்கும் பொதுவான இந்தப் பண்பாடு, இன்றைய சர்வதேச கலாசாரத் தொடர்புகளினால் புத்துயிர் பெறலாம். நீங்கள் தொன்மையான பழம் பெரும் இலக்கியம் கலாசார வளர்ச்சி இவற்றையும் ஆராயப்போவது இந்த மகாநாட்டின் மிக முக்கியமான அம்சமென்று நான் கருதுகிறேன். தமிழாராய்ச்சிபூரண உயிர்த்துடிப்புள்ள ஒரு கலாசாரத்தோடு சம்பந்தப்பட்டது. அது, கேவலம் மொழி அல்லது சரித்திர ஆராய்ச்சியாக மட்டும் இருந்து விடக் கூடாது. அந்த ஆராய்ச்சி இன்று நல்லதொரு கலாசாரத்தின் நறுமணத்தை உலகெங்கும் பரப்புவதற்குரிய சாதனமாக தமிழை உயர்த்த வேண்டும். இதுவே நமது குறிக்கோளென்று நான் நினைக்கிறேன். ★

---

### பேச்சும் ஏச்சும்

**ஆங்கில எழுத்தாளர் சார்ள்ஸ் லேம்ப் ஒரு முறை சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது கூட்டத்திலிருந்து ஒருவர் 'உஸ்...ஸ்...ஸ்...' என்று சத்தம் வைத்தார்.**

**அப்போது அவர், ''என்னுடைய அறிவுக்கு எட்டியவரை இப்படி சத்தம் செய்வது வாத்து, பாம்பு, மூடன் ஆகிய இந்த மூன்றும் தான். இந்த மூன்றிலும் எது சத்தம் வைத்தது என்று இப்போது மேடையில் வந்து சொல்லலாம்'' என்றார்.**

**'சிவபாலன்'**

சிறப்புச் சிறுகதை

# கறிவேப்பிலைகள்

மலரன்பன்

மாலையில்-தோட்டத்தில்-வேலை முடிந்த கையோடு, காட்டுத் தொங்கல் மலைக்குப்போய், ஆடுகளுக்கு குழை வெட்டிக் கொண்டு வந்த பச்சைமுத்து, சிறுசிறு கட்டுகளாகக் கட்டி, ஆட்டுப்பட்டியின் முகப்பில் தொங்க விட்டுக் கொண்டிருந்தான்.

''கண்டக்கையா உங்கள கையோட கூட்டிக்கிட்டு வரச் சொன்னாரு......''

ஆட்டுப்பட்டிக்கு வெளியே நின்றுகொண்டு, கண்டக்டரின் வீட்டு வேலைக்காரப் பையன் குரல்கொடுத்ததைத் தொடர்ந்து அவசர அவசரமாக 'கைவேலை'யை முடித்துவிட்டு பையனைப் பின் தொடர்கின்றான்.

நாலுஎட்டுத்தான் நடந்திருப்பான், ஆட்டுப்பட்டிக்கு முன்னேயிருக்கும் லயத்தின் ஒரு காம்பிராவின் உள்ளேயிருந்து வெளியே வந்த பச்சைமுத்துவின் மனைவி'

''கண்டக்கையா ஊட்டுக்குத்தானே போறீங்க...... ஏங்கிட்டயும் அம்மா பகக்லகே சொன்னிச்சி; ஒங்கள கட்டாயம் வரச் சொல்லி...... என்னான்னு சித்த ஒடி கேட்டுட்டு வாங்க......'' என கணவனைத் துரிதப்படுத்துகின்றாள். ஐயா வரச்சொல்லி ஆள் அனுப்பியிருக்கின்றார் என்பதில் அவனுக்கு மட்டுமல்ல, மனைவிக்கும்கூட மகிழ்ச்சிதான். அவளது குரலில் அது இழையோடுகின்றது.

இருளில் ஒளி சங்கமமாகிக் கொண்டிருக்கும் அவ்வேளையில், ஐயாவின் வீட்டைநோக்கி நடந்து கொண்டிருந்த அவன் மனதில், 'ஐயா ஏன் வரச்சொல்லியிருப்பார்' என எழுந்த கேள்விக்கு பதில் புலப்படவேயில்லை.

வாசலில் ஐயாவே தன்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைக்கண்டு, தலையில் கட்டியிருந்த 'முண்டாசை' அவிழ்த்து இடது கம்கட்டில் இடுக்கிக் கொண்டு, ஓரமாகப் போய் நிற்கின்றான்.

''அட ஏன் அங்க நிற்கிற, சும்மா உள்ளுக்கு வாப்பா பச்சமுத்து......''

கையைப் பிடித்து இழுக்காத குறையாக ஐயா குழைவுடன் அழைக்கவும் அவனுக்கு என்னவோ போல் இருக்கின்றது.

''இல்லீங்க நான் இப்படியே நிக்கிறேனுங்க......'' கைகளைக் கட்டிக்கொண்டு கூனிக்குறுகி நின்ற நிலை இன்னும் மாறவில்லை.

''நான் ஒரு முக்கியமான விசயம் பேசத்தான் வரச் சொன்னேன், வா உள்ளுக்கு......'' அவனது கையைப்பற்றி இழுத்துக் கொண்டு சமயற்கட்டுக்கே — பங்களாவின் உள்வாசல் வழியாகத்தான் — போய்விட்டார்.

வாசற்படியில் போய் நின்றாலே 'தள்ளி நில்லு' என கடுகடுக்கும் இவர், பங்களாவின் உள்ளுக்கே கூட்டிக் கொண்டு போய்விட்டாரே...... இந்த உபசரிப்பு எதற்காக என்பது அவனுக்கு விளங்கவில்லை.

''ஐயா எம்புட்டு நல்ல மனுசன்......'' மனதிற்குள் வாழ்த்திக் கொண்டான்.

''கூச்சப்படாம இப்புடி ஒக்காரு...... அட கீழ இல்லப்பா பலாக்கட்டையில ஒக்காரு......''

ஐயா எவ்வளவுதான் சொன்னாலும் 'பலாக்கட்டை'யில் அவர் முன் உட்கார அவனுக்கு மனமேயில்லை.

கண்டக்டரின் மனைவி ஒரு சிரட்டையில் தேனீரும், ஒரு துண்டு கடதாசியில் சீனியும் வைக்கின்ருள்.

''தேத்தண்ணியா ஒக்காந்து குடி பொறகு பேசுவோம்'' ஐயா அவனை பலாக்கட்டையில் உட்கார வைத்தேவிட்டார்.

சீனியை இடது உள்ளங்கையில் கொட்டிக்கொண்டு, வலது கையில் சிரட்டையைப் பிடித்து, அவன் தேனீர் குடித்துக்கொண்டிருக்கும்போது, அவர் பேச்சை தொடர்கின்ருர்.

''இந்தா பாருப்பா நான் ஒன்னியதான் மலைபோல நம்பி இருக்கேன். ரொம்ப முக்கியமான விசயம். நம்ப பெரிய மகளுக்கு இன்னும் ஒரு கெழமயில கல்யாணம் நடக்கப்போவுது. நேற்றுதான் எல்லாம். முடிவாகினிச்சி. அங்கிட்டும் தள்ளி இங்கிட்டும் தள்ளி இன்னம் ஆறுநாள்தான் பாக்கி இருக்கு. பெரிய எடத்தில கல்யாணம். ரொம்ப செறப்பா செய்யணுமின்னு ஆச வச்சிருக்கேன்......''

அவன் தேனீரை வாயால் ஊதி ஊதி குடித்துக் கொண்டிருந்தா

---

மக்களுடைய வாழ்வை வாழ்ந்து, ஜனங்களின் துன்பங்களால் துன்புற்று, அவர்களது இன்பத்தால் இன்பமடைந்து, அவர்களுடைய கவலைகளையும் தேவைகளையும் முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும் - அப்போது தான் எழுத்தாளன் உண்மையான வாசகர்களின் உள்ளங்களில் உணர்ச்சித் துடிப்பு ஏற்படுத்தும் நூலை இயற்ற முடியும்.

லெனின், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர்
''மிகயீல் ஷொலகவ்''
தொகுப்பு ''மணி''

லும், கவனம் பூராகவும் அவரது பேச்சில்தான் இருக்கின்றது.

''ரொம்ப செறப்பா செய்யணு மின்னு எனக்கு ஆசை. எவ்வ ளவு செலவு போனாலும் பரவா யில்ல. பெரிய பந்தல் ஒன்னு போட்டு சோடிக்கனும்......''

பச்சைமுத்து பதில் பேசாமல் அவர் சொல்வதையே கேட்டுக் கொண்டிருந்தான்.

''ஒனக்கு பூவேலை யெல்லாம் தெரியும்தானே, கடதாசிப் பூ வெல்லாம் வெட்டுவியா......''

',கிளி மொகப்பா, பறக்கிற யாழியா, குதிர வாகனமா, சால் ருவா...... வேண்டிய தினுசில வேனுங்கிற மாதிரி வெட்டி சோடிப்பேங்க, ஒங்க புண்ணியத் தில......'' அவனுக்கு உற்சாகம் பிறந்துவிட்டது. கடதாசிப் பூ வேலைகள் செய்வதில் அவனுக்கு தனிவிருப்பம்.

தோட்டத்தில் நடைபெறும் கல்யாணம், சடங்கு, தேர்த் திருவிழா போன்ற வைபவங் களில் அவனது கைவண்ணத்தை ஐயா பல முறைகள் கண்டிருக் கின்றார்.

''ஆமா பச்சமுத்து ஒன்னிய தான் நம்பி இருக்கேன். இப்பவே சொல்லிட்டேன். கூட கையொத விக்கு ரெண்டாள சேத்துக்க. அஞ்சு நாள்ல பந்தல் வேலை யெல்லாம் கிளீனு முடியனும். தோட்டத்தில வேலை முடிஞ் சோடன தெனம் அந்தியந்திக்கு வந்து செஞ்சினு போதும்''.

''நாளே நாள்ல டிப்டொப்பா முடிச்சிர்ரேனுங்க......''

''ஆமா அதுதான் சொன்னேன். ஏன்னு வேலய கெடுத்துபுட்டு நின்னு மெனக்கெட்டு செய்ய சொல்றது, அது பாவம். நீயும் புள்ளக்குட்டிகாரன், பொழைக் கனும்பாரு. ஒருத்தன கெட்டுப் போக நான் சொல்லமாட்டேன்''.

''ஐயா எதுக்கும் ரோசன பண் ணுதீங்க. நான் எல்லாம் கிளீனு செஞ்சிப்புடுறேனுங்க......''

''ஆமாப்பா திரும்பித் திருப்பி சொல்றேன், ஒன்னியதான் நம்பி இருக்கேன். நாளைக்கு அந்திக்கே வேலைய தொவங்கிரு, சரியா? கல்யாணத்தன்னக்கி நான் ஒன் னிய நல்லா கவனிச்சிக்கிறேன். சரி அப்ப போயிட்டு வா. வெத் தல வேனுமின்னு அம்மாகிட்ட வாங்கிக்கிட்டு போ!''

ஐயா முதுகில் தட்டி பேசியது அவனுக்கு என்னவோ போல் இருக்கின்றது. சந்தோசம் தாங்க முடியவில்லை. கண்டக்டர் வீட்டில் ஒரு நெருப்புக் கொள் ளியை வாங்கி விசுறியபடி இரு ளில் லயத்தை நோக்கி நடக்கின் றான் பச்சைமுத்து.

* * *

கண்டக்டர் செல்வராசாவைத் தெரியாதவர்கள் யாரும் இருந்தாலும். அவரது பங்களா வைத் தெரியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது அப்பகுதியில். முதன்முதலில் அப்பகுதியிலே கட் டப்பட்டதனாலோ என்னவோ' 'செல்வராசா கண்டக்டர் பங் களா' என்றால் இதுதான் என எவரும் சொல்லி விடுவார்கள். இவ்வளவுக்கும் அவர் ஒன்றும் அந்த தோட்டத்தில் வேலை செய் பவர் அல்ல. மாத்தளைக்கு அரு கில் எங்கோ ஒரு தேயிலைத் தோட்டத்தில் கண்டக்டராக வேலைபார்க்கும் அவர் நாட்டுப் புறத்தில் வசதியான இடத்தில் சிறு காணி வாங்கி பங்களா கட்டியிருக்கின்றார், பச்சைமுத்து வுக்கு அவரோடு அவ்வப்போது கண்டு 'சும்மா சிரித்த' பழக்கத் தைத் தவிர வேறு தொடர்பு இல்லை. அவரது பங்களா இருப்

பதற்கு பக்கத்துத் தோட்ட மொன்றில் அவனுக்கு கூலிவேலே.

''எம்புட்டு பெரிய மனுசன்... சொத்து சொகம் உள்ளவரு. உக்கார சொல்லி, தேத்தண்ணி குடுத்து, முதுகிலேயும் தட்டி குடுத்தாரே......'' மகிழ்ச்சியில் விசுறிய கொள்ளிக்கட்டையில் திப்பொறி பறக்க வேகமாக நடக்கின்றான் வீட்டுக்கு.

வீடு திரும்பிய கணவன் கூறியவற்றைக் கேட்ட மனேவிக்கு சந்தோசம் 'சொல்லிமாளாது'.

''எந்த வேல கெடந்தாலும் பரவாயில்ல. ஐயா ஊட்டு வேலேய செறப்பா செய்யனும்......'' கணவன் மனேவி இருவரினதும் ஏகோபித்த முடிவு இதுதான்.

தோட்டத்தில் இன்னும் நான்கு பேரைக் கையுதவிக்கு அமர்த்திக் கொண்டு, அடுத்தநாளே பந்தல் வேலேயை ஆரம்பித்துவிட்டான். மாலேயில் - தோட்டத்தில் - வேலே முடிந்தவுடன், அவசரஅவசரமாக புறப்பட்டான் என்றால், வீடுதிரும்ப இரவு பத்துப் பதினென்றுக்கு மேலாகிவிடும்.

''கல்யாணப் பந்தல் சும்மா ஜொலிஜொலின்னு ஜொலிக்கப் போகுது பாரு. ஐயா மோட்டார் மினிக்கி லயிட்டு போடுறேன்னு சொல்லியிருக்காரு. வேண்டிய வேண்டிய பெட்டன்ல பூ வேல செஞ்சியிருக்கேன்......''.

ஒவ்வொரு நாளும், இரவில் வீடு திரும்பியவுடன், மனேவியிடம் கல்யாணத்தைப் பற்றியே தான் கதையளந்துக் கொண்டிருப்பான்.

கல்யாணத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன.

பந்தல் முகப்பில் முன்னங்கால் களேத் தூக்கியபடி - வாயில் ஓர் ஆள் உயரமுள்ள பூச்சரங்களேக் கௌவிக்கொண்டு நிற்கும் பாவனேயில் இரண்டு யாழி உருவங்கள் சோடனேசெய்து வைத்தால் மிக அழகாக இருக்கும் என்று நினேத்தான்.

இதேபோன்ற யாழி உருவங்கள் யாத்தனே தேரில் மிக அழகாக பவனி வருவதை கண்டிருக்கின்றான்.

யாழி உருவங்கள் இரண்டு கட்டாயம் செய்து வைக்கவேண்டும் என்ற ஆவலில் உருவத்திற்கான மாதிரி அச்சை அடுத்த தோட்டத்து அழகனிடம் இரவல் வாங்கிக்கெகண்டு வந்திருந்தான். திண்ணேயிலமர்ந்து, படுக்கைக்கு பயன்படுத்தும் படங்குத் துண்டைக் கீழேவிரித்து, அதன் மேல் காட்போட் துண்டுகளே வைத்து, மாதிரி அச்சை, காட்போட் மட்டைகளுக்கு மேல் பொருத்தி வெகு நேர்த்தியாக உருவத்தை வெட்டிக் கொண்டிருந்தான்.

இரவு சாப்பாட்டிற்காக, கடையில் பற்றுவரவு கணக்கில், பாண் வாங்கப்போன மனேவி வெறுங் கையோடு திரும்பிவந்து, கடை முதலாளி பண்டா, பாண் கடன் தர மறுவிட்டதாக கூறியதைக் கேட்க அவனுக்கு ஆச்சரியமாக இருக்கின்றது.

செய்துக்கொண்டிருந்த வேலே யை அப்படியே போட்டுவிட்டு கடையை நோக்கி நடக்கின்றான்.

பண்டா முதலாளியின் தேனீர் கடைக்கு வாடிக்கையாக விறகு கொண்டுவந்து போடுவது பச்சை முத்துதான். மாலேயில் வேலே முடிந்தவுடன் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கட்டு விறகு கொண்டு வந்துபோடுவான். கடனுக்குச் சாமான்கள் கொடுக்கும் பண்டா

முதலாளி, அவனது கணக்கில் விறகுக்காக மாதம் ஐந்து ரூபாய் வரவு வைத்துக்கொள்வார். எந்தச் சாமான் கேட்டாலும் இல்லை யென்று சொல்லமாட்டார்.

பண்டா முதலாளி ஏன் கடன் தர மறுத்தார் என்ற யோசனையில் நடக்கின்றான்.

பத்துப்பதினைந்து நாட்களுக்கு முன்பு, பண்டா முதலாளியின் ஆட்டுக்கிடாய் ஒன்று — சுமார் முப்பது இருத்தல் இருக்கும் — வதங்கிய சீதா இறப்பர் குழையை சாப்பிட்டதால், வயிறு உப்பி செத்து விட்டது. நாற்பது ரூபாய்க்கு மேல் விலையுள்ள கிடாயை பச்சைமுத்துவைக் கூப்பிட்டு இனுமாகவே கொடுத்து விட்டார். வேறு ஆளாக இருந்திருந்தால், செத்த ஆட்டை இரண்டாம் பேருக்குத் தெரியாமல் வெட்டி கூறுபோட்டு விலை பண்ணியிருப்பார்கள். பண்டா முதலாளி நட்டத்தை கணக்குப் பார்க்காமல், கிடாயை பச்சைமுத்துவுக்குச் சும்மா கொடுத்து விட்டார். (பச்சைமுத்து கிடாயைக் கூறுபோட்டு இறைச்சியை விலை பண்ணியது வேறு கதை) பச்சைமுத்துவுக்கு அவர் மேல் தனி அபிமானம்.

கடையை அடைந்துவிட்டான்.

''என்னு மொதலாளி பான் கடன் குடுக்கமாட்டேன்னு சொன்னிங்களாமே?''

கல்லாபெட்டியருகில் கைகட்டி நின்றவாறே, கேள்வியெழுப்பியவனைக் கண்டு முதலாளி முகம் சுளிக்கின்றார்.

''ஆமா நீ நம்பன் கடைக்கி தெனம் வெறகு வெட்டி போடுறேன் சொல்லி ஒத்துக் கொண்டனது. இப்ப அஞ்சு நாள் கடே பக்கம் சரி வாரனது இல்லே. நான் வெறகு இல்லாமே மிச்சங் கஸ்டப்பட்டனது''.

முதலாளி படபடக்கும் காரணம் புரிந்துவிட்டது.

''இன்னம் ரெண்டு நாளக்கி பொறுத்துக்கங்க. கண்டக்கையா மகள் கல்யாணம் முடிஞ்சோடன, அதுக்கு பொறகு தெனம் வெறகு கொண்டு வந்து போடுறேன்''.

''நமக்கு இப்ப கடை வேலைக்கி வெறகு இல்லே. நாளக்கிகொண்டு வந்து போட ஏலாதா?''

''நாளைக்கி கல்யாண வீட்ல எனக்கு ஏகப்பட்ட வேல இருக்குங்க. அதோட நான் கல்யாண வீட்ல கட்டாயம் இருந்தே ஆகணும்......''

முதலாளிக்கு 'கேந்தி' தலைக் கேறிவிட்டது. இனி கடைப் பக்கமே வரவேண்டாம் என விரட்டிவிடுகின்றார்.

கடனுக்கு இனி சாமான் கிடைக்காது. வருடக் கணக்கில் செய்துவந்த 'பார்ட்டைம்' வேலையொன்றில் மண் விழுந்துவிட்டது.

ஐயா வீட்டு கல்யாணத்தை விட 'பண்டா முதலாளிக்கு விறகு கொண்டுபோய் போடுவதொன்றும் பெரிதல்ல' என முடிவு செய்து கொள்கிறான்.

* * *

கல்யாணப் பந்தல் யாரு போட்டது...... வங்களாவ யாரு சோடிச்சது அப்புடின்னு எல்லாரும் வாயூறி நிற்க போறுங்க...... நேத்து ஐயா வந்திருந்தாரு, சோடனையை பாத்து அவரே மலச்சி போய் விட்டாரு போ. அவர் மொகம் சந்தோசத்தில சும்மா எப்புடி இருந்திச்சி. இந்த

மாதிரி வேல வேற எங்கயாவது செஞ்சேன்னு அம்பது அறுப தின்னு கூலி வாங்கிவேன். எவ் வளவு வேனுமின்னு கேட்டாரு. இவ்வளவு குடுங்கன்னு நான் வாய் தொறக்கல்ல. கேக்கலாமா. அஞ்சி ரூபா குடுத்தாரு. பொறகு பாத்து தார்ரேன்னு சொல்லி யிருக்காரு......''

ஐந்து ரூபாய் நோட்டொன்றை நீட்டுகின்றான் மனைவியிடம்.

''என்னு அஞ்சி ரூவாதான் குடுத்தாரா ஒரு கெழமயா ரவ்வு ரவ்வா பாடு பட்டதிற்கு......''

'சும்மா யாண்டி அப்புடி முழிக் கிற. பணம் பெருசா; மனுசன் பெருசா. கல்யாணத் தண்ணக்கி வந்து பாருடி எப்புடி எனக்கு சவரட்ன நடக்கிதுன்னு......''

மனைவியை வாயடைக்கச் செய் துவிட்டான் என்றாலும், குறைந் தது, நாற்பது ரூபாய் சரி கூலி கொடுக்கும் அளவுக்கு வேலை செய்திருக்கின்றான் என்பது அவ னுக்குத் தெரியாமலில்லை.

''கல்யாணத்திற்கு பெரிய தொரமாரெல்லாம் வாராங்க ளாம். அதுனால கல்யாணத்திற்கு போற நேரம், ரொம்ப கிளீனு டிப்டொப்பா போகனும்''.

மனைவியிடம் மிக ஆசையோடு கூறும்போது தான், தன்னிடம் ஒரு நல்ல வேட்டியும் சட்டையும் கூட இல்லாதது நினைவுக்கு வரு கின்றது.

பேச்சை இடையில் முறித்துக் கொண்டவன், விறுவிறு வென மேட்டு லயத்திற்குப் போகின் றான். அவசர பயணங்களுக்கு, வேட்டியும், சேர்ட்டும் தேவை யென்றால், மேட்டுலயத்து சன்னா சியிடம்தான் தஞ்சம் புகுவான்.

சன்னாசியிடம்தான் நாலைந்து டெரிலின் சேர்ட்டுகளும் வேட்டி யும் ஒழுங்காக இருக்கின்றன. சன்னாசியிடம்பல்லைக்காட்டி ஐயா வீட்டு கல்யாணத்திற்குப் போவ தற்கு வேட்டியும் சேர்ட்டும் ஒழுங்குசெய்துவிட்டு, நேரே ஐயா வீட்டிற்கு நடக்கின்றான்.

ஐயா வீட்டையடையும்போது இருட்டிவிட்டது. பெட்றோமெக்ஸ் ஒளியில் பந்தல் ஜெகஜோதியாக இருக்கின்றது.

நாளைக்கு கல்யாணம். பந்தல் சோடனை முக்கால் வாசிக்குமேல் முடிவடைந்துவிட்டது. தென்னங் குருத்தோலை தோரணம் போடு வது மட்டுமே பாக்கி. பகலே தென்னங்குருத்தோலைகள் வெட்டிவைக்க வேண்டும் என எண்ணியிருந்தான், பல வேலைக ளின் இழுபறியில் மறந்தே போய் விட்டது.

யோசித்துக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. ஐயா முழுப் பொறுப்பையுமே தன்னி டம் விட்டிருக்கும்போது, இரவு பகலென்றுபார்த்தால் சரிபடாது.

டோர்ச்லைட் வெளிச்சத்தில் ஏறுகின்றான் தென்னைமரத்தில். தென்னங்குருத்தோலைகளை வெட்டி விழுத்திவிட்டு, விறுவிறு வென இறங்கும்போது ஓர் ஐந் தடி தூர இடைவெளியில் வரும் பொழுது கைதவறிவிடுகின்றது.

மரத்திலிருந்து விழுந்ததில் பலத்த அடியொன்றும் — பயப் படும்படியாக — இல்லையென்றா லும், வலது முழங்காலை கீழே கிடந்த கல்லொன்று பதம் பார்த்துவிட்டது. காயம்பட்ட இடத்திலிருந்து இரத்தம் விறு விறுவென வெளியேறுகின்றது.

கூடி நின்றவர்கள் நன்றாகப் பயந்துவிட்டார்கள்.

''இதுக்குப் போய் இப்படி பயப்படுறீங்களே. இது சும்மா ஊமைக்காயம். கொடல் வந்தா தானே அரைக்காயம். சும்மா வேலைய கவனீங்க......''

மற்றவர்களை சமாதானப் படுத்துவதற்காக பச்சை முத்துவின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் இதுவென்றாலும், வலி 'விண்விண்'ணென்று தெரிக் கின்றது.

ஒரு வெற்றிலையுடன் சிறிது பாக்கையும் சுண்ணாம்பையும் மென்று காயத்தில் வைத்து ஒரு துண்டு துணியால் கட்டிக் கொள் கின்றான்.

வலியைக்கூட பொருட்படுத் தாமல் வேலைகளில் ஈடுபட்டு, அவன் வீடுதிரும்பும்போது இரவு பாதி சாமத்திற்கு மேலாகிவிட் டது.

திருமண நாள் இன்றுதான். பகல் முகூர்த்தம். திருமண வைப வம் மாத்தளை கோவிலில் என் றும், வரவேற்பு விருந்துபசாரங் கள் ஐயா வீட்டில் என்றும்தான் ஏற்பாடு. காலையிலேயே எல்லோ ரும் கோவிலுக்குச் சென்றுவிட் டார்கள்.

பாக்கி சிறிது வேலைகள் இருந் ததால் பச்சைமுத்துவுக்கு கோவி லுக்கு போகமுடியவில்லை.

மணமக்கள் வீடி திரும்பும் போது சோடனைகள் யாவும் முடிந்து, வரவேற்பு மண்டபம் தயாராக இருக்க வேண்டுமாகை யால் அதிகாலையிலேயே வேலை யில் ஈடுபட்டவன், எல்லா வேலை களையும் செய்துமுடிக்கும்போது பின்னேரம் மூன்று மணியாகி விட்டது.

வேலைகளை முடித்துவிட்டு வீடு திரும்பியவன் அவசர அவசரமாக குளித்துவிட்டு, சன்னுசியின் இர வல் உடையில் தன்னை அலங் கரித்துக்கொண்டு, மனைவி, பிள்ளை யுடன் குடும்ப சமேதரராய் கல் யாண வீட்டிற்கு புறப்படும்போது மாலை ஆறு மணிக்கு மேலாகி விடுகின்றது.

பந்தலின் அழகைக் கண்டு மிளிர்ந்த ஐயா, அதை இத்துணை சிரமத்துடன் செய்த அவனுக்கு செய்யப்போகும் உபசரணைகளை மனதில் கற்பனை செய்துகொண்டு அந்த மகிழ்ச்சியில் நடக்கின்றான்.

மின் விளக்குகள் வர்ண ஜாலம் காட்ட, பந்தல் ஜெகஜோதி யாக மின்னுகின்றது. நைலோன், நைலக்ஸ், பட்டுகளும்; டெரிலீன், டெட்ரோன் டுயீட் சூட்டுகளு மாக, கல்யாணவீடு கலகலப்பில் பொங்குகின்றது. ஒலிப்பெருக்கி அலறிக் கொண்டிருக்கின்றது.

பந்தலுக்கு வெளியே மேற்குப் புற மூலையில் வீசியெறியப்பட்ட எச்சி இலைகளை நாய்கள் சில நக்கிக்கொண்டிருக்கின்றன. இலை களில் கொத்துகொத்தாக கறி வேப்பிலைகள் மட்டும் கிடக்கின் றன. கறியின் ருசியை மிகைப் படுத்துவதற்காக மணத்தையெல் லாம் அர்ப்பணித்துவிட்ட பின் னர், தூக்கியெறியப்பட்ட சார மற்ற கறிவேப்பிலைகள்.

பச்சைமுத்து மனைவியுடன் பந் தலினுள் நுழைந்துவிட்டான். உள்ளே ஒரே கலகலப்பு, சிரிப் பும் கும்மாளமுமாக இருக்கின் றது. ஓரத்தில் ஒரு மூலையில் நிற்கின்றனர் இருவரும்.

சில வினாடிகள் கழிந்திருக்கும். அதோ ஐயா உள்ளேயிருந்து வரு கின்றார். அவர்களை நோக்கித் தான் வருகின்றார். உள்ளே கூட் டிக்கொண்டு போவதற்குப் போலும்.

அருகில் வந்த ஐயா, தரதர வென அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு, வெளியே ஒதுக்குப்புறமான ஒரு இடத்திற் குப் போகின்றார்.

''என்ன பச்சமுத்து இன்னக்கி வந்திருக்க. கூலியாளுகளுக்கு நான் 'இன்விடேசன்' குடுக்க லியே! பெரியபெரிய தொரமா ருாக உத்தியோகக் காரங்களுக்கு மட்டும்தான் விருந்து. நாளக்கி அந்திக்கிவந்து என்னமாவது வாங்கி சாப்பிட்டுட்டு போ. இப்ப ஒன்னும்செய்யஏலாது...''.

ஐயா கூறிவிட்டு போய்விட் டார்; யாரோ காரில் வந்திறங் கிய துரையை வரவேற்க.

அதிர்ச்சியில் மௌனமானவன். பந்தலை வெறித்துப் பார்த்தபடி நிற்கின்றான் பச்சை முத்து.

பந்தல் முகப்பில் 'ஆட்டோ மெடிக்' பல்புகள் கண்களை சிமிட்டிக் கொண்டிருக்கின் ச் றன.

(யாவும் கற்பனை)

---

சீனக் குட்டிக் கதை

## நரி மூளை

இரை தேடி காட்டில் அலைந்தது புலி. நரி ஒன்று சிக்கியது. நரி செல்லியது,

மிருகங்களின் சாமராஜ்யத்தில் அரசனாக என்னை ஆண்டவன் நியமித்துள்ளார். நீ என்னை விழுங்கினால் ஆண்டவன் கட்டளையை மீறுகிற பாவத்தைச் செய்கிறாய். ''
புலி கேட்டது ''நீ அரசனா?...''

''சந்தேகம் இருந்தால் என்னுடன் வா, நிரூபித்து காட்டுகிறேன்.'' புலி அதற்குச் சம்மதித்தது. நரி முன்னால் சென்றது. புலி அதன் பின்னால் நடந்தது.

புலியை தூரத்தில் கண்ட மற்ற மிருகங்கள் அலறி ஓடின. நரியைக் கண்டுதான் அஞ்சி ஓடுவதாக புலி நினைத்துக் கொண்டது.

புலி சொல்லியது, ''நீ மிருகங்களின் அரசன் தான்.''

புலி பசியுடன் குகைக்குத் திரும்பியது.

தமிழில் ''பத்மன்''

# நான் செய் நித்திலம்.

வானிலோர் முத்தினை வைத்திழைத் ததுபோல்
வளர்மதி தவழ்ந்தது; மாடியின் மீதுயான்
இப்பி ஒன்றில் முத்தொன் றிட்டனன்;
இப்பி மூடிற்று; ஈரைந்து மாதம்
கழிந்தது; கழிந்தபின் என்மனை விளங்கக்
கண்ணன் போலொரு கனிவாய்க் குழந்தை
வந்தது; வந்தபின் வாணிலா முகத்தென்
மனையாள் அதைஎன் மடியிடைக் கிடத்தி
ஈரைந்து திங்களின் முன்னால் ஒருநாள்
நீங்கள் செய்த நித்திலம் இதுவே.
என்று கூறி மகிழ்ந்தனள்; அவள் கண்
ஓரம் கண்டேன்; ஒளிமுத் தொன்று
அங்கு துடித்ததும் கண்டனன்; அவள் விழி
தொட்டேன்; முத்துத் தீய்ந்தது; மகிழ்ச்சியில்
உள்ளத்திப்பியில் உதித்துக் கண்வழி
வந்தஅம் முத்தில் வையகத் தின்பம்
யாவும் கண்டனன்; அம்முத்தெனது
மடியிடைக் கிடந்த மணிமிசை விழுந்திட
மணியை எடுத்துநான் மலர்க்கரம் தடவி
உச்சி மோந்தே உளம்மகிழ்ந் திட்டேன்.
நான் செய் நித்திலம் தேன்செய் ததுவே!

அ. ந. கந்தசாமி

விமர்சனம்

# கணேசலிங்கனின் முதல் நான்கு நாவல்கள்

## ஒரு மதிப்பீடு

கே. எஸ். சிவகுமாரன்.

ஈழத்துத் தமிழ் நாவல்கள், உடனிகழ்கால வாழ்க்கைப் போக்குகளை, விமர்சனக் கண்ணோட்டத்தில் யதார்த்த ரீதியாகச் சித்திரிக்கின்றன. கலைஞனுக்கு ஒரு சமூகப்பணியுண்டு. சமுதாயத்தைச் சித்தரிப்பதுடன் மாத்திரமல்லாது எழுத்தாளன் சிந்தனையும் மக்களிடையே உண்டுபண்ணுகிறான். சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு எழுத்தாளன் வழிகாட்டுகிறான், உலக இலக்கிய வரலாற்றில் அத்தகைய எழுத்தாளர்கள் பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன.

செ. கணேசலிங்கன் இதுவரை மூன்று சிறுகதைத் தொகுப்புக்களை வெளியிட்டிருக் டிருக்கிறார்:- ''நல்லவன்'', ''ஒரே இனம்'', ''சங்கமம்''. ''நீண்டபயணம்'', ''சடங்கு'', ''செவ்வானம்'', ''தரையும் தாரகையும்'', ''போர்க்கோலம்'' அவர் எழுதிய நாவல்கள்.இவற்றுள் ''போர்க்கோலம்'' தவிர்த்து ஏனையவை பற்றிச் சுருக்கமாக எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடைசியாகக் கூறப்பட்ட நாவல், தனித்தே, பிறிதாக விமர்சிக்கவேண்டியதொன்று.

கணேசலிங்கனின் நாவல்களின் சித்தரிக்கப்படும் விஷயங்கள் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்குள் நடைபெற்றவை. அவற்றை ஒருவிதத்தில் வரலாற்று நாவல்கள் என்று கூறலாம். இவை வெறுமனே வரலாற்று நாவல்களாக இல்லாது, சமூக விமர்சனங்களாகவும் அமைந்துள்ளன. சமூக விமர்சனப்பார்வை மூலம், அவர் வாசகர்களைச் சிந்திக்க வைக்கிறார். அவருடைய நாவல்கள் மூலம் மேலோட்டத் தகவல்களைப் பெறுவதோடல்லாமல், அடிப்படைக் காரணங்களையும் அறிந்துகொள்ள முடிகிறது.

சமூகத்தில் நடைபெறும் சம்பவங்கள் என்ன, அவை ஏன் அப்படி நடைபெறுகின்றன, அவற்றிற்கான காரணங்கள் எவை, அவற்றைத் தவிர்ப்பதற்

கான வழிவகைகள் என்ன என்பவற்றை எல்லாம் அவர் நாவல்கள் மூலம் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

நாவலாசிரியர் கணேசலிங்கனின் கோட்பாடுகள் அவருக்கே உரித்தானவை. அவற்றை நாம் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது ஏற்றுக்கொள்ளாது விடலாம். அது அவரவர் அபிப்பிராயத்தைப் பொறுத்திருக்கிறது.

நாவலாசிரியர் தான் கூறவருவதை கூறுவதில் வெற்றிபெற்றுள்ளாரா என்பதே நமது பரிசீலனை. முதலில் நாம் கேட்க வேண்டிய கேள்வி, ஆசிரியரிடத்தில் நேர்மை தொனிக்கிறதா என்பதாகும். அதாவது ஆசிரியருடைய எழுத்தில் ஒளியுண்டா என்பதாகும்.

கணேசலிங்கன் கொண்டுள்ள கோட்பாடுகளில் அவருக்கு நிறைய நம்பிக்கை உண்டு. ஆதலால் அவருடைய உள்ளத்தில் ஒளியுண்டு. அது வாக்கிலும் பிரதிபலிக்கிறது. எனவேதான் கணேசலிங்கன் எழுத்தில் நேர்மையும், உண்மையும் காணப்படுகின்றன.

கூறவதின் தன்மையைப் பொறுத்துள்ளது, கூறப்படும் விதம். கூறப்படும் விதம் சற்றே கலைப்பாங்காக இருப்பின், படைப்பின் வெற்றியும் அழகியல் உணர்ச்சியை ஊட்டும். கலைப்பாங்காக அமையாவிடினும், உள்ளடக்கச் சிறப்பு, வேறு எவற்றையும் விடப் போதுமானது.

கணேசலிங்கனின் நாவல்களில் உருவப் பரிசோதனைகள் இல்லைத்தான். வெறும் அகவய உணர்ச்சிகளைச் சித்தரிக்க முயலும் அரைவேக்காடு உருவப் பரிசோதனைகளால் யாது பயன்? ஆகவே கணேசலிங்கன் உருவத்தில் அளவுக்கு மீறிய அக்கறை எடுத்துக் கொள்ளாவிட்டாலும், சம்பிரதாயமான முறையிலாகுதல் தான் கூறுவதைக் கூறிவிடுகிறுர்.

---

**மணப்பரிசு.**

நோபல் பரிசுத் திட்டத்துக்குரியவரான ஆல்பிரட் நோபலுக்கு அவருடைய பணிப்பெண்கள் ஒருத்தி மேல் என்று மில்லாதவாறு ஒரு பிரியம் ஏற்பட்டிருந்தது. ஒருநாள் அவள் நோபலிடம் வந்து தனக்கு திருமணம் நடக்க விருப்பதாகச் சொன்னுள்.

''உனக்கு என்னமாதிரி அன்பளிப்பு திருமணத்தன்று வேண்டும்'' நோபல் பணிப்பெண்ணைப் பார்த்துக் கேட்டார்.

''உங்களின் ஒரு நாளைய வருமானம்...'' என்றுள் பணிப்பெண். அவள் கேட்டுக் கொண்டதன் படி ஆல்பிரட் நோபல் ஒரு நாள் வருமானமான ஏழாயிரம் டாலரைக் கொடுத்தார்.

தொகுப்பு **''சுகந்தன்''**

ஆகையால்தான் இன்று தமிழ் நாவல் இலக்கியத் துறையில் கணேசலிங்கன் முக்கிய இடம் வகிக்கிருர். கணேசலிங்கன், இளங்கீரன், நந்தி போன்ருேரின் நாவல்கள் தமிழ் நாட்டு நாவலாசிரியர்களுக்கு வழிகாட்டியாக அமையும். வெறும் படடோப, மேற்போக்கான, உணர்ச்சிகளைத் தீட்டும் தென்னிந்திய நாவலாசிரியர்கள், சாசுவதமான உணர்ச்சிகள், மாற்றத்திற்கு உட்படும் நிதர்சன சம்பவங்களைவிட உலகப் பொதுமைவ்வானவை என்று காரணம் காட்டலாம். ஆனல் உணர்ச்சிகள் மாத்திரமே உலக இயக்கமன்று என்பது அவர்களுக்குப் புரிவதற்குக் காலம் எடுக்கும். அதுவரை பத்திரிகைரக நாவல்களின் மவுசு தென்னிந்தியாவில் அழியாது.

இனி ஒவ்வொன்ருக திரு. செ. கணேசலிங்கனின் முதல் நான்கு நாவல்களையும் எடுத்கொள்வோம்.

யாழ்ப்பாணத்துக் கிராமமொன்றில் சிறிது சிறிதாக ஏற்படும் மாற்றங்களை ''நீண்ட பயணம்'' சித்தரிக்கின்றது. இவை பிரதானமாக சமூக அரசியல் மாற்றங்களாகும் ''குறைந்த சாதிக்காரர்'' என்று அழைக்கப்படும் அக்கிராம மக்களின் எழுச்சிதான் அங்கே ஏற்படும் சமூக மாற்றமாகும். சமய நம்பிக்கைகளில் வேருன்றியவையும், மனிதரால் திணிக்கப்பட்டவையுமான சமூக மதிப்புகள் காரணமாக எழுந்ததடங்கல்களை உடைத்துக்கொண்டு அந்தத் தீண்டாமைச் சாதியினர் எழுச்சி பெற்று இறுதியில் தமது சொந்த உள்ளூராட்சி மன்றங்களில் பிரதிநிதித்துவம் பெறுமளவிற்கு பலம் பெற்று விடுகின்றனர்.

இந்த சமூக, அரசியல் விடுதலையைப் பெறுவதற்கு அவர்கள் மூன்று நீண்ட வருடங்கள் போராட வேண்டியிருந்தது. அவர்களுடைய அந்தப்போராட்டமே இந்த நாவலில் சித்தரிக்படுகின்றது.

இது சாதிப் பிரச்சினையைப் பற்றிய ஒரு நாவல். ஆசிரியரின்

### மாமனும் மருகரும்

பிரஞ்சுக் கதாசிரியர் '**பால்சாக்**' கிற்கு ஒரு மாமன் இருந்தார். அவர் இறக்கும் போது மருமகன் பால்சாக்கிற்கு கொஞ்சம் பொருள் வைத்து விட்டு இறந்தார். ஒரு முறை நண்பர்கள் கேட்ட கேள்விக்கு பால்சாக் மாமனைப் பற்றி, ''நேற்று ஐந்து மணிக்கு நானும் மாமாவும் முன்பிருந்ததை விட இன்பமான வாழ்வு பெற்ருேம் ...'' என்ருராம்.

'மாலி'

நோக்கம் நேர்மையாக இருப்பதனுல், கருணைப் பார்வையுடன் கதாபாத்திரங்களின் அவல வாழ்வைச் சித்தரிப்பதனுலும் நாவல் நோக்கத்தில் வெற்றி பெறுகிறது. ஆயினும் நாவலின் முடிவு அவசரக் கோலத்தில் அமைந்துள்ளது. அரசியல் பிரக்ஞை கொண்டவனுகவே கதாநாயகன் சித்தரிக்கப்பட்டுள்ளான். இந்த அரசியல் குறிக்கோளை நோக்கியே அவனும் ஏனைய பாத்திரங்களும் இயக்கப்படுகின்றனர். கிராம சபையில் சாதி, அல்லது வகுப்பு பிரதிநிதித்துவத்துக்கு இடங்கொடுக்கும் விதத்தில் நாவலை எழுதியிருப்பதினுல் நாவலாசிரியர் மறைமுகமாக இவ்வித பிரதிநிதித்துவங்களை ஆதரிக்கின்ருர் எனத் தோன்றுகின்றது. அவ்விதம் செய்வதனுல், மாற்றுப் பரிகாரம் காணப்படும்வரை இவ்வித பிரதிநிதித்துவங்கள் இருந்துவருமென்பதை நாவலாசிரியர் உணர்த்துகின்ருர்.

யதார்த்தத் தொனியில் விவரணை நடையும் அதிகார பூர்வமான வர்ணனையும், கொண்டது இந்த நாவல். சமூகத்தில் நசுக்கப்படும் ஒரு வர்க்கத்தினரின் சில்லறை நிகழ்ச்சிகள் கூட ஆசிரியரின் கூர்ந்த பார்வையில் சிறப்பாக இடம் பெற்றுள்ளது

செம்பாட்டுப் பள்ளர் இனத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை சற்றே தரம் உயர்ந்த சாதிக்காரன் ஒருவன் மணம் முடிப்பதன் மூலம் சீர்திருத்தத்தை தனது சொந்த வீட்டில் அவன் முதலில் கொண்டுவருகிருன்.

காதற் காட்சிகளை வருணிக்கையில் ஆசிரியரின் கவிதை சார்ந்த வர்ணனைகள் அழகாகவும், கவித்துவம் நிரம்பியதாகவும் அமைந்துள்ளன. ஏனைய இடங்களிற் கூட ஆசிரியரின் எளிய நடை நாவலின் சுவாரசியத்திற்கு வகைசெய்கிறது. செம்மைப்படுத்தப்பட்ட கொச்சை மொழி விவரணைக்கு அழகு முலாம் பூசுகிறது. செயற்கையான முறையில் அந்த உணர்ச்சிப் பிரவாகம் இந்நாவலில் ஊட்டப்படவில்லை. நாவலில் வரும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நம்பத்தகுந்த விதத்தில் அமைந்துள்ளது. ஆயினும் நாவலில் முக்கிய பாத்திரங்கள் அல்லாத ஒருசில பாத்திரங்களின் தனிப்பட்ட வாழ்க்கை நிகழ்ச்சிகளை நீடித்திருப்பது குறைபாடாக அமைந்துள்ளது.

வாசிக்கத்தக்க நாவலாக இது சுவாரஸ்யமான முறையில் அமைந்துள்ளது. சாதாரண நிகழ்ச்சிகள் கூட நாவலில் முக்கியத்துவம் பெறுகின்றன. நேர்மையான நோக்கம், ஆசிரியருக்கு இருக்கின்றதால் இது வரை எந்த ஈழத்து நாவலாசிரியரும் கைவைக்காத விஷயமொன்றைச் சித்தரிக்க முன்வந்தற்காக இந்த நாவலாசிரியரைப் பாராட்டவேண்டும். இளங்கீரன் தனது நாவல்களில் சாதிப் பிரச்சினையைப்பற்றி தொட்டுச் சென்ருலும், குறிப்பாகவும், பிரத்தியேகமாகவும் அதுபற்றி எழுதவில்லை. ஆயினும் தீண்டாமைச் சாதியினரின் ஒருசில முக்கிய வாழ்க்கைப் போக்குகளை முழுதாகவே இந்த நாவலாசிரியர் சித்தரிக்

கிறார், திரைப்படத்திற்குரிய பல அம்சங்கள் இந்த நாவலில் இருப்பதால் இதனைக் கவிநயம் செறிந்த திரைப்படமாகவும், எடுக்கலாம்,

கணேசலிங்கனின் இரண்டாவது நாவலாகிய சடங்கு என்ற நாவலில் யாழ்ப்பாணக் கிராமிய இந்து திருமணங்களோடு ஒட்டிய வைபவங்கள், மரபுகள், சம்பிரதாயங்கள் ஆகியவை பூரணமாக சித்தரிக்கப்படுகின்றன, இதுபற்றி அறிந்திராத ஒருவ க்கு இந்தப் புத்தகம் ஓர் கைநூலாகவும், விளங்கக் கூடும்.

நாவலாசிரியர் பல விஷயங்களை இந்த நாவல் மூலம் எள்ளி நகையாடுகிறார். தம்பதிகளை ஒன்று சேர்த்து வைப்பதற்கு முன்னர் ஒருசில பழமைவாதிகள் திருமணத்தில் படாடோபத்தையும், மரபுகளையும் கிரிகைகளையும் அனுட்டானங்களையுமே கவனிக்கின்றனரன்றி, தம்பதிகளின் மன இசைவு. கருத்தொற்றுமை ஆகியவற்றை கவனிப்பதில்லை என்று நாவலாசிரியர் தனது கருத்தாகக் கொண்டுள்ளார். அதாவது வித்தியாசமான புதிய பரம்பரை ஒன்று எழுச்சி பெறுவதை பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்று நாவலாசிரியர் குற்றம்சாட்டுகிறார், அவருடைய கருத்தின்படி நிலப்பிரபுத்துவ அடிப்படையிலமைந்த தமது சொந்த வாழ்க்கைக் கருத்தோட்டங்களை பெற்றோர்கள் திணிப்பதனால் அவர்கள் தமது சந்ததியினருக்கு மட்டுமின்றி தமக்கும் தீங்கை ஏற்படுத்திக் கொள்கின்றனர் என்பது நாவலாசிரியரின் கருத்து.

இந்த நாவலுக்கு முன்னுரை எழுதிய கலாநிதி கா. சிவத்தம்பியின் பகுப்புமுறை, கருத்தோவியம் சிந்தனைக்குரியதா

---

### பொன்னான நேரம்

ஜார்ஜ் பெர்னாட்ஷா சாகும் வரைக்கும் தாடி வைத்திருந்தார். இந்தப் பெரிய மனிதர் எதற்காக தாடி வைத்திருக்கிறார் என்று ஒரு பத்திரிகை நிருபருக்கு சந்தேகம் பிறந்தது. ஒரு நாள் பெர்னாட்ஷாவிடம், "நீங்கள் என்ன காரணத்திற்காக தாடி வைத்திருக்கிறீர்கள். அதனால் ஏதாவது நன்மைகள் உண்டா?..." என்று கேட்டார்.

"நிச்சயமாக நன்மை உண்டு." என்றார் ஷா. மேலும் அப் பத்திரிகை நிருபரை நோக்கி "இளைஞரே! இந்தத் தாடியை வழிக்கின்ற நேரத்தில் நிச்சயமாக ஒரு நாடகம் எழுதியிருப்பேனல்லவா?..." என்றார்.

**'சிவபாலன்'**

சுருங்கச் சொன்னுல் முற்போக்கான சமூதாயம் ஒன்றில் மாற்றத்திற்கு உட்பட்டுவரும் சமூக மதிப்புகளை இந்த நாவல் சித்தரிக்கிறது. ஆயினும் பாத்திரங்கள் இயங்குவதற்கு அரசியல் இயக்கங்கள் காரணமாக இருந்தனவா என்பது நாவலாசிரியரால் தெளிவாகக் காட்டப்படவில்லை. அத்துடன் நாவலாலாசிரியர் குறிப்பிடும் நிலப் பிரபுத்துவ பிரதிநிதிகளாக இப்பாத்திரங்கள் இல்லை என்பது எனது அபிப்பிராயம். கணேசலிங்கனின் சித்திர விஸ்த்தரிப்பு அகலத்தில் குறைவாக இருந்த போதும் அது உலகியல் பரிமாணங்கொண்ட ஆழ்ந்த நாவலாகும். இந்த நாவ்ல் ஓர் துன்பக் கதையை யதார்த்த பூர்வமாக சித்தரிப்பதோடல்லாமல் உடனிகழ்கால முரண்பாடுகளையும் இணக்கமின்மைகளையும் சரியான முறையிலும் புத்தி பூர்வமான முறையிலும் மக்கள் அனுகுவதற்கு வழிகாட்டுகிறது.

கணேசலிங்கனின் மூன்ருவது நாவலாகிய செவ்வானம், கலாநிதி க. கைலாசபதி கூறுவது போலஓர் வரலாற்று நாவலாகும். உடனிகழ்கால அரசியல் சமூக பின்னணி கொண்டது இந்த நாவல்.. இந்த நாவலில் முடிவே இல்லை என்பது குறிப்பிடத்தக்க ஒரு அம்சம்.

அரசியல் சமூக மாற்றங்கள் காரணமாக சடுதியில் பணம் குவித்த உயர் மத்தியதர வர்த்தகர் ஒருவரைச் சுற்றி இந்த நாவல் பின்னப்பட்டிருக்கிறது. அவருடைய நேரடி எதிர்ப்புப் பாத்திரமாக பல்கலைக்கழகத்தில் பயின்ற தொழிற்சங்கவாதி ஒருவர் வருகிருர். அவர் தொழிலாளர் வர்க்கத்துடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவர். பத்திரிகாலயத்தைச்சேர்ந்த பெண் செயலாளர் ஒருவரும், வர்த்தகரின் டாம்பீகம் விரும்பும் மனைவியும் கதையில் மெல்லிடையாள் கவர்ச்சியை ஏற்படுத்துகின்றனர். சமூகத்திலுள்ள சகல தீங்குவிளைவிக்கும் குறைபாடுகளையும் நீக்குவதற்கு ஆசிரியர் மார்க்சிய கோட்பாட்டை ஆலோசனையாகத் தெரிவிக்கின்ருர். வாழ்க்கை பற்றியும் சமூகம் பற்றியும் ஆசிரியர் கொண்டுள்ள கருத்து அவருடையதாகும். சுவையாக வாசிக்கக் கூடிய நாவல் என்ற முறையில் இது ஆவலைத் தூண்டும் விதத்தில் அமைந்துள்ளது. வாழ்க்கையையும் வாழ்க்கைப் போக்குகளையும் தீர்மானிக்கும் ஒவ்வொரு செல்வாக்கான அம்சமும் - மத்தியதர வர்க்கத்தினரின் தார்மீகம், இனக் கவர்ச்சி, காதல், செல்வம், அரசியல், சமூகப் போக்கு — ஆகியவை நாவலில் தீட்டப்படுகின்றன. பாத்திர அமைப்பில் குறிப்பாக தொழிற்சங்கவாதியின் பாத்திர வார்ப்பில் ஒருசில குறைபாடுகள் உள்ளன. அத்துடன் நாவலின் உருவத்திலும், பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆயினும் உள்ளடக்கமே உருவத்தைத் தீர்மானிக்கிறது. உயர்ந்த மட்டத்தில் மதிப்பீடு செய்தால் கலைஞர் ஒருவரின் ஆழ்ந்த நோக்கு இந்த நாவலில் இடம் பெற்றுள்ளது,

கணேசலிங்கனின் நான்காவது நாவல் ''தரையும் தாரகையும்'' ஆகும்: தனது நாவல்களுக்கு உடனிகழ்கால வரலாற்றை அவர் பின்னணிநிகழ்ச்சிகளாக தேர்ந்தெடுக்கிறார். இந்த நாவலில் 58ம் ஆண்டு நடைபெற்ற கீழ்த்தரமான இனக்கலவரங்கள். பின்னணி நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன. ஆனால் அவை பின்னணி நிகழ்ச்சிகளாக மாத்திரமே இடம் பெறுகின்றன. உண்மையில் நாவல் மத்தியதர வர்க்கத்தினர் திருமண உறவுகள் பற்றி கொண்டிருக்கும் மதிப்புகளின் போலித் தன்மையை காட்டுகிறது. ஒரு விதத்தில் இதனை விளக்க நாவல் என்றும் கூறலாம். காதல், இனக்கவர்ச்சி, போன்றவைக்கு இன்னொரு அர்த்தம் பொருள் வளமாகும் என்பது ஆசிரியரின் கருத்து.

அத்துடன் கீழ்மட்டத்திலுள்ள மத்தியதர வர்க்கத்தினர் அல்லது தொழிலாள வர்க்கத்தினர் செல்வந்தர்களின் வாழ்க்கைப் போக்குகளை பின்பற்றுவதையும் இந்த நாவல் கண்டிக்கிறது. அதே வேளையில் பெண்களின் உளப்பாங்கும், ஆண்களின் உளப்பாங்கும், சித்தரிக்கப்பட்டுள்ளது. மத்தியதர வர்க்கத்திற்கு தன்னை உயர்த்திக் கொள்ளும் ஒரு கீழ்மட்ட மத்தியதர வர்க்க கதாநாயகனின் பரிதாபத்தை இந்த நாவல் சித்தரிக்கிறது. வர்க்க பேதங்கள் கொண்ட சமுகத்தில் மத்தியதர வர்க்க மனிதன் தரம் மூன்று எழுதுவினைஞன் இணையாக அமையும்பொருளாதாரப் பிரச்சனைகள் ஆகியவை நாவலாசிரியரின் பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

கணேசலிங்கனின் முடிவுகள் தீ வி ர பாங்குடையவையாக இருக்கலாம். ஆனால் அவற்றை சுவையாகத் தீட்டுவதில் அவர் வெற்றி பெற்றுள்ளார் என்பது பாராட்டத்தக்க விஷயமாகும்.

---

### அமெரிக்கா பற்றி பெர்னட்ஷோ

அமெரிக்க வீராங்கனையான ஹெலன்கெல்லரை கௌரவித்து ஒரு விருந்து நடைபெற்றது. அதற்கு பெர்னட்ஷாவும் விருந்தினராகப் போயிருந்தார்.

ஹெலன்கெல்லர் விருந்து மண்டபத்துக்குள் வந்ததும் ஆஸ்டர் சீமாட்டி ஷாவின் காதோடு காதாக ''அவரை உங்களுக்குத் தெரியுமல்லவா? கண்ணும் குருடு. காதும் கேளாது.'' என்றார் மெதுவாக.

உடனே பெர்னட்ஷா, ''எவ்லா அமரிக்கர்களும் அப்படித்தான்.'' என்றார் கேலியாக.

தொகுப்பு. 'சுகந்தன்'

# என்றோ ஒரு நாள்

முருகையன்

— என்றோ ஒரு நாள்
இதுதான் நடந்திருக்கும்

பின் தூங்கி முன் எழூஉம் பேராசான் பேசினார்.
பின் தூங்கி முன் எழுவார் பேராசான் - ஏனென்றால்
பொன்போல் மதிப்பார் பொழுதை; ஒருகணமும்
வீணாக்க மாட்டார்; விழித்திருப்பார், ஆராய்வார்.

—எவ்வாறு தோன்றி யிருக்கும் பிரபஞ்சம்?
இவ்வாறு கேட்டேன். இதற்குப் பதிலாகப்
பேசத் தொடங்கினார். பேராசான், காலடியில்
கீழே அமர்ந்து, அவரைக் கேட்டிருந்தேன்—மிக்க
பணிவும் அடக்கமும் பவ்வியமும் பூண்டபடி.
பின் தூங்கி முன் எழூஉம் பேராசான் பேசினார்:

என்றோ ஒரு நாள் இது தான் நடந்திருக்கும்..

அந்த நாள், இல்லை, இல்லை—
ஆதியின் அந்தப் போதில்
இந்த வான் இல்லை, கோள்கள்
எவையுமே இல்லை; விண்மீன்
சந்திர சூரியர்கள்
தகதகச் சோதி காலும்
எந்த ஓர் பொருளும் இல்லை
இந்த நாள் நாளே இல்லை.

காலம் என்றிதனைக் கூறக்
கருதினால், இதற்காய் நாங்கள்
காலம் என்பதற்குச் சொல்லும்
கருத்தையே விரித்தல் வேண்டும்.
நீலமும் சிவப்பும் இல்லா
நீளிருட் சுற்றுச் சூழல்...
ஊமையாய் எதுவும் தூங்கும்.

வெறுவெளி இருட்டி யாண்டும்
விரிந்தது-கிடந்ததம்மா!
இறுகிய சடத்தின் கட்டி
இதனிடை மிதந்து தொங்கும்

குறுகிய அறிவினேம் நாம்.
குறித்த அந்நிலையின் தன்மை
அறிவினுல் நோக்கக் கூட
ஆற்றல் இல்லாதோர் நாங்கள்.

குறியில்லை; குணங்களில்லை;
கும்பிட யாருமில்லை.
நெறியில்லை; நியமம் இல்லை.
நித்திரை - விழிப்புமில்லை;
மறியில்லை மானுமில்லை;
மனிதருமில்லை; அந்த
வெறுவெளி இருட்டில் யாண்டும்
இறுகிய சடத்தின் கட்டி.

சடத்தின் கூறுெவ்வொன்றுக்கும்
சக்திகள் இருந்ததுண்மை.
இடத்தில் வேருகி வேருய்
இவை தனித் தனியாய் நிற்பின்
குடத்திலே ஆகாசம் போற்
குறை உயிர் இருந்திருக்கும்.
தொடர்ச்சியாய் வெறும் சடம்-ஓம்
தொல் பொருள் விண்ணில் யாண்டும்.

பேராசான் சொன்னுர். 'பிசங்கி' இடைநிறுத்தி
நான் ஓர் சிறிய வினுவைச் சமர்ப்பித்தேன்:
—முழுப்பொருள் அனைத்தும் நோக்க
மொய்த்த அத்திரளில் ஏதும்
விழுப்பொருள், உணர்வு, ஞானம்,
'வித்தியர்' இருந்திராதோ?
எழுச்சிக்கு முன்னர் இந்த
இயற்கை ஓர் 'மூடம்' தானே?
தொழத்தகும் அவரை நோக்கித்
தொடுக்கிறேன், இந்தக் கேள்வி.

—இதைப் பற்றி அறியோம் நாங்கள்,
என்றவர் தொடர்ந்தார்பின்னும்:
—விதைப்புக்கு முன்னர் வாய்ந்த
'விசழங்கள்' பற்றியெல்லாம்
கதிர் தள்ளப் பிறந்து தூளாய்க்
கலயத்துட் கிடக்கும் பிட்டின்
உதிர் துகள் பேசலாமோ?
உண்மையில், துகள்கள் நாங்கள்.

இடைமறித்தமைக்காய் நானே
இதயத்துள் நொந்து கொண்டேன்
தொடருங்கள் என்ற பாங்கில்
சொல்லின்றி அமர்ந்து கொண்டேன்.
சடம் அன்று கிடந்த வாறும்,
சக்தியின் விகசிப்பாலே

பாடார் என வெடித்துப் போந்து
படர்ந்ததும் விரித்தார், ஆசான்.
அசுரமா வேகத்தோடே
அகன்றன தூள் தூளாகி.

விசை திறந்திடித்து மூசி
விண்ணெலாம் துளக்கம்எய்யத்
திசைதொறும்-திக்குத் தோறும்-
சிதறின சடத்தின் தூசி.
புசு புசு என்று வாயுப்
புகார்க்குலம் கிளம்பிற்றம்மா!

புகைக் குழாம் பரந்து சென்று
புகுந்தது நெடிய விண்ணில்.
தகத்தகாயங்கள் தோன்றிச்
சத்தங்கள், மின்னல் வெட்டு
வெகுத்தன; வாயு மாலை
மெல்லென்ன அசைந்து பாய்ந்து
சுகப்படல் அடைந்து தோய்ந்து
துழாவின விசும்பை எல்லாம்.

ஊர்ந்தன வாயுத் தூறல்;
உறழ்ந்தன; ஒன்றேடொன்று
சேர்ந்தன; அப்பால் மாறிச்
சிதைந்தன; பின்னுப்பட்டு
நூர்ந்தன; நூராப் பாங்கர்
நுழைந்தன; நொதித்த கள்ளிற்
சார்ந்திடும் நுரையே போன்று
சடப்பொருள் திரியும் மாதோ!

பீறின, பீறிச் சென்று
பிழிபடல் போல நைந்து
கீறின; கீறல் பொத்துக்
கிழிந்தன; அழுந்தி வெந்து
வேறினமாக மாறி
விழுந்தன, முயங்கிப் பேர்ந்த
ஆறுகள் தோறும் எல்லாம்
அதிசயம் மிளிரும் அம்மா!

சுழன்றது வாயுக் கீலம்;
சுருண்டது குழைந்து பாய்ந்து,
கழன்றது; கடுமை நொய்தாய்க்
கலந்தது; விழுந்து கெம்பி
உழன்றது கறங்கி ஓடி
உருண்டது, திரண்டு சிந்தி.
கழிந்தம் காலம், இந்தக்
காரிய நிகழ்வின் போது.

பச்சைகள், நீலச் சாம்பற்
பனி நிறம், மஞ்சட் செம்மை
கத்தரிப் பூவின் வண்ணக்
கலவைகள், நீயன் நீலம்,
கப்பிய கடுமையான
கபிலங்கள், பேப்பிள், ரேசு
பற்பல நிறங்கள் அந்தப்
பழமையாம் போதிற் காணும்.

சடுதியாய் வெடித்த அந்தச்
சடப்பொருட் குவையினின்றும்
உருவென்றும் கோள்கள் என்றும்
உறைந்தன ஒவ்வொன்றாக.
திடும் என்றும் மோதல் போன்ற
சில செயல் தவிர அண்டம்
பொடிபடா தமைதியாகிப்
பொதுவித்தைக்மைந்துவாழும்.

போற்றன்கள், இலக்றன் போன்ற
பொருள்களின் முயக்கத்தாலே
வேற்றியல் மூலகங்கள்
வெளிப்பட்டுச் சேர்வையாகி,
காற்றுப்போற் கலவையாகி,
காசினிப் பொருள்கள் ஆகி
மாற்றமுற்றமைந்தே இந்த
வையத்தை ஆக்கும் தம்பி.

இவைகளை, கணிப்பினாலும்,
இன்றுள்ள இயற்கை தந்த
சில சில சாட்சியாலும்
சிந்தித்தால் உணரலாகும்.
குவலயத் தோற்றம் பற்றிக்
கொள்கைகள் வேறும் உண்டே.
அவை பிறர் மதமாம், ஆனால்
என் மதம் இதுவே என்றார்.

உண்மையோ, பொய்யோ, யார் தான்
உரைத்திட வல்லார்? ஆயின்
உண்மையை நாடிச் செல்லும்
திரம் உண்டு நமக்கெல்லாமே!
உண்மையாய் இதனைக் கூறிச்
சிரித்தனர் ஆசான்; நானே
எண்ணம் வேறாகி அப்பால்
ஏகினேன், வணக்கம் கூறி.

பின் தூங்கி முன் எழும் பேராசான், நேரத்தைப்
பொன்போல் மதிப்பார்; பொழுதை அவர் போக்கார்.
அன்னார் கருத்தில் அகிலப் பிறப்பிது தான்.

என்றோ ஒரு நாள் இதுவா நடந்திருக்கும்?

சிறு கதை

# மிருகங்கள்

பொ. பத்மநாதன்

''சூரங்குச் சனியனே! இறங்கடா'' காட்டுத்தனமாகச் செல்லி போட்ட கூச்சலில் அந்த ஒதுக்குப் புறமான முற்சந்தியே கலகலத்தது. ஆனுல் அந்த ஐந்து வயதுச் சனியன் சொக்கன், சற்ருவது அசையவில்லை. ஆலமரத்துக்கு வலது புறமாக அழுது வடிவது போல் எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்கின் கீழ் அரை ஆள் உயரத்திலிருந்த குப்பைத் தொட்டிலின் மேல் விளிம்பில். சர்க்கஸ் பையனைப் போல் ஏறிநின்று பெரிதாக ஓலமிட்டுக் கொண்டிருந்தான்.

''வடை வாங்கித் தா...வடை வாங்கித் தா...''

''வடை கேக்குதா சனியனே! கொப்பனை எழுப்பிவிட்டால் உதைதான் தருவான்.''

''எழுப்பிவிடன்'' என்று வலது கரத்தை ஆட்டினுன் சொக்கன்.

''எனகென்ன பயமா?...'' பற்களைக் கடித்தபடி போதையோடு ஆலமரத்தின் வேரொன்றில் படுத்திருந்த மூக்கனைப் பார்த்தாள் செல்லி. பெரிதாக குறட்டைவிட்டபடி தூங்கிக் கொண்டிருந்தான் அவன். பின்னேரம் அவன் குடித்த புளிச்சல் கள்ளுக்கு இடிவிழுந்தாலும் அவன் எழுந்திருக்க மாட்டான் என்று அவளுக்குத் தெரியும்.

''பிசாசு சனியன்... படுத்தால் எழும்பாது...'' அவனைத் திட்டிக் கொண்டு மடியில் கிடந்து பால் குடித்துக்கொண்டிருந்த குழந்தையைத் தூக்கினுள் செல்லி. அது வீலென்று அலறியது.

''வயித்துமாரிச் சனியன்'' என்றுஎரிச்சலோடுமுணுமுணுத்துக் கொண்டே மறுபக்க மார்பைக் குழந்தையின் வாயில் திணித்தாள். திட்டும் போது வார்த்தைக்கு ஒரு 'சனியன்' போடாமல் அவளால் திட்ட முடியாது.

சொக்கன் அதற்குள் மறுபடியும் ஓலமிடத் தொடங்கிவிட்டான்.

''வடை வாங்கித் தா...வடை வாங்கித்தா...''

''சனியனே! உன்னை என்ன செய்யிறன் பார்'' குழந்தை அலற அலற மார்பிலிருந்து பிடுங்கி நிலத்தில் கிடத்திவிட்டு அவனை நோக்கி ஓடினுள் செல்லி. குழந்தையின் உதடுகள் பட்டு ஈரம்படிந்த மார்பை மூடக்கூட அவளுடைய ஆத்திரம் இடங் கொடுக்கவில்லை. அவள் அருகே வரும் வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்து விட்டுக் குரங்கு போல் தொட்டியிலிருந்து றேட்டுக்குப் பாய்ந்தான் சொக்கன்.

''கிரீச்...'' செல்லி வெலவெலத்துப் போனுள். வேகமாக வந்து சந்தியில் திரும்பிய காரொன்று சக்கரங்கள் வீறிட சொக்கனே ஒட்டினுற் போல் நின்றது. காரோட்டி வந்த பெரியவர் ஆத்திரத்தோடு கழுத்தை நீட்டி ''நாயே!...'' என்று கத்தினுர்.

''செத்துத் தொலேக்கப் போறியா?'' சொக்கன் பயத்தோடு ஓடிவந்து செல்லியின் பின்னுல் நின்று கொண்டான். அவள் நறுக்கென்று அவள் தலேயில் குட்டினுள்.

''பார் சனியனே! இண்டைக்கு உன்னே என்ன செய்கிறெனெண்டு...''

காரின் பின் ஆசனத்தில் இளம் பெண்ணெருத்தி ஒரு முதிய அம்மாளின் தோளில் சாய்ந்து படுத்திருந்தபடி முனகிக் கொண்கொண்டிருந்தாள்.

''சீக்கிரம் போங்கோ...'' என்று பெரியவரைப் பார்த்துப் படபடத்தாள் அந்த அம்மாள்.

''மிருகங்கள்!'' பெரியவர் வெறுப்போடு முணுமுணுத்தபடி காரைக் கிளப்பினுர்.

செல்லி சொக்கனே தரதர வென்று ஆலமரத்தடிக்கு இழுத்து வந்து ஒருகரத்தால் அவனேப் பிடித்தபடி மறுகரத்தால் மூக்கனின் தோளேத் தட்டினுள்.

''இந்தா...! எழும்பு...'' அவன் அசையவே இல்லே.

''சனியனே! எழும்பித் தொலேயன்...'' ஆத்திரத்தோடு அவள் உலுக்கிய வேகத்தில் மூக்கனின் தலே வேரை விட்டு நழுவி தரையோடு மோதியது.

''என்னடி அது?'' போதை தெளியாமல் குமறியபடி உட்கார்ந்தான் அவன்.

''இந்தச் சனியனே என்னெண்டு கேள்''; என்று சொக்கனே அவன் முன்னே தள்ளினுள் செல்லி.

''வடை வேணுமாம்.''

''வடையா?'' கேட்கக் கூடாதது தொன்றைக் கேட்டுவிட்டது போல கண்கள் அகல விரிய அவன் தலேமயிரை எட்டிப்பிடித்தான் மூக்கன்.

''நாயே! வடையா வேணும்? தொடர்ந்து அவனேக் கீழ்த்தரமாகத் திட்டியபடி ஓங்கி அவன் முதுகில் ஒரு அறை வைத்தான்.

''ஐயோ வடை வேண்டாம்...' வீரிட்டலறியபடி அப்படியே இருந்துவிட்டான் சொக்கன்.

ஒன்றுமே நடக்காதது போல் கொட்டாவி விட்டபடி பழைய படி வேறில் தலேயை வைத்துப் படுத்துக் கொண்டான் மூக்கன். செல்லி அழுது கொண்டிருந்த குழந்தையைத் தூக்கி மறுபடியும் பாலேக்கொடுக்கத் தொடங்கினுள்.

சொக்கனின் அழுகை இலேசில் ஓயவில்லே. ''படுத்துத் தொலே சனியனே...'' என்று இடையிடையே அவன் மேல் எரிந்து விழுந்து கொண்டிருந்தாள் செல்லி.

கடைசியாக அழமுடியாமல் அப்படியே தூங்கத் தொடங்கிவிட்டான் சொக்கன். செல்லியும் குழந்தையோடு அவனருகே படுத்துக் கொண்டாள்.

அதுவும் ஒரு குடும்பம்... பிச்சைக்காரக் குடும்பம். அவர்களுடைய வீடு அந்த ஆலமரம் தான்.

காலையில் எழுந்து செல்லியும் மூக்கனும் ஒவ்வொரு பக்கமாகப் பிச்சைக்குப் போவார்கள் செல்லி பிள்ளைகளைக் காட்டிப் பிச்சை கேட்பாள். மூக்கன் முடக்குவாதக்காரன் போல் வலது கரத்தை முடக்கிக் கொள்வான்.

மூக்கனுடைய உண்மையான பெயர் கிருஷ்ணன். அவனுடைய மூன்றரை அங்குல நீளமூக்கைப் பார்த்து எல்லோரும் மூக்கன்... மூக்கனென்று கேலியாகப் பரிகசித்துப் பிறகுஅதுவே நிலைத்து விட்டது. அந்த ஆத்திரத்தைக் காமாலைக்காரன் போல் பருத்த சொக்கோடு பிறந்த தன் மகனுக்குச் சொக்கன் என்று பெயர் வைத்துத் தீர்த்துக் கொண்டான் மூக்கன்.

பின்னேரம் அவன் வரும்போது அன்றைக்குப் பிச்சையெடுத்த அரை வாசிக்காசில் கள்ளைக் குடித்து விட்டுச் செல்லிக்கு இரண்டு லேகியங்கள் வாங்கி வருவான். ஒரு முறை அவளுக்கு இடுப்புவலி வந்து, அதைக் கொடுக்கப்போய்த் தினசரி அது இல்லாவிட்டால் அவளுக்கு இடுப்பு வலி வருமென்ற நிலைக்கு வந்துவிட்டது.

அவர்களுடைய ஊடல், கூடல், இன்பம், துன்பம் எல்லாம் அந்த திறந்த வெளியில்தான். 'வடை... வடை...'' இலேசாகப் பொழுது புலரும் சமயத்தில் அரைவிழிப்பிலிருந்த செல்லி திடுக்கிட்டு எழுந்தாள். சொக்கன் வாய் பிதற்றியபடி புரண்டு குப்புறப் படுத்துக் கொண்டிருந்தான். செல்லிக்கு மனம் நெகிழ்த்து விட்டது. படுத்திருந்தபடி வலது கரத்தை நீட்டிச் சொக்கனின் முதுகை வருடினாள். இரவு மூக்கனிடம் வாங்கிய அறையில் முதுகு சற்றுப் புடைத்திருந்தது.

''சனியன்! குழந்தையைப் பிசாசுமாதிரி அடித்திருக்கானே...''. புருசனை மனதுக்குள் திட்டிக் கொண்டே சொக்கனை இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டு கொஞ்சினாள் செல்லி.

''கண்ணு! உனக்கு எவ்வளவு வடை வேணுமெண்டாலும் வாங்கித்தாரனடா...'' அவன் நித்திரைக் கிறுக்கத்தோடு தூங்கிக் கொண்டிருந்தான்.

சர்ரென்று மெல்லக் கார் ஒன்று நிற்பது போல் ஓசை கேட்டது. செல்லி தலையைத் தூக்கிப் பார்த்தாள். அவளுக்கு வியப்பாக இருந்தது மின்சார விளக்குக்கு எதிர்ப்புறம் காரொன்று நின்றது. இருள் முற்றாக விளங்காட்டாலும் மின்சார விளக்கின் ஒளியில் அவளால் நன்றாகப் பார்க்க முடிந்தது.

இரவு சொக்கனை முட்டப் பார்த்த அதே கார். அந்தப் பெரியவர். துணி மூட்டைபோல்

வெள்ளையாக ஒன்றை இரண்டு கரங்களிலும் ஏந்தியபடி காரிலிருந்து இறங்கி வேகமாகக் குப்பைத் தொட்டியருகே வந்தார் கண்கொட்டாமல் செல்லிபார்த்துக்கொண்டிருந்தாள். துணி மூட்டையைக்குப்பைத் தொட்டியுள் வைத்துவிட்டு விறு விறுவென்று போய்க் காரில் ஏறிக்கொண்டார் பெரியவர். மறுவினாடி கார் அங்கிருந்து போய்விட்டது.

செல்லிக்கு கனவு கண்டது போலிருந்தது 'என்னவாயிருக்கும்?' பெரிதாக மனதுக்குள் எழுந்த ஆவலை அடக்க முடியாமல் போய்ப் பார்க்கும் எண்ணத்தோடு எழுந்தாள் அதற்குள், குப்பைத் தொட்டியின் பக்கமாக மெல்ல எழுந்த குழந்தையின் அழுகை ஒலி உண்மையை அவனுக்கு உணர்த்தி வெலவெலக்க வைத்து விட்டது.

'கொலைகாரப் பாவி! குழந்தையையா போட்டுட்டுப் போருன்.' என்று இரைந்து கத்தியபடி குப்பைத் தொட்டியை நோக்கி ஓடினுள். அவளுடைய கத்தல் மூக்கனை எழுப்பி விட்டது.

'காலங்காத்தாலை ஏண்டி கத்தித் தொலைக்கிருய்?' திட்டிக்கொண்டே எழுந்து பார்த்தான்'

குப்பைத் தொட்டிக்குள் துணி மூட்டை ஒன்று அசைந்து அழுகை ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தது குழந்தையின் உருவம் வெளியே தெரியவில்லை. செல்லிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை' பிரமை பிடித்தவள் போல் பார்த்துக் கொண்டு நின்ருள்.

'என்னடி அது?' மூக்கனின் குரல் அவளை உலுக்கியது.

'இங்கை வா மச்சான்' என்று கத்தினுள்.

'இந்த அநியாயத்தை வந்து பாரன்.'

'இழவு புடிச்சவள். சும்மா இருக்க விடாள்...' எரிச்சலோடு முணுமுணுத்துக் கொண்டே எழுந்து தள்ளாடியபடி வந்தான் மூக்கன்.

செல்லி குழந்தை மூட்டையை அவனுக்குக் காட்டிவிட்டு கடகடவென விபரமாய் எல்லாவற்றையும் சொன்னுள்.

'என்னடா சினிமாக் கதை போலை...' வியப்போடு எதையோ சொல்லத் தொடங்கிய மூக்கன் திடீரென்று 'சனியனே!... என்று அவள் மேல் எரிந்து விழுந்தான்.

'பார்த்துக்கொண்டிருக்கியே? தூக்கிக் கொள்ளன். பச்சைப் புள்ளை. மூச்சுத் திணறப் போகுது.' செல்லி பரபரப்போடு குழந்தையைத் தூக்கித் துணியை விளக்கி மின்சார

விளக்கொளியில் பார்த்தாள் அவள் கண்கள் வியப்பால் விரிப் தன.

'பெட்டைப் புள்ளே மச்சான். தங்கவிக்கிரகமாயில்லே?'

'போடி அறிவு கெட்டவளே! தங்கவிக்கிரமாயிருந்தால் பெட் டிக்குள்ளே வைச்சுப் பூட்டியிருப் பாங்களடி. இது புள்ளேதானே... வெறும் சதையும் இரத்தமும் சேர்ந்த புள்ளே.

பிஞ்சுக் கால்களேயும், கரங் களேயும் அசைத்தபடி குழந்தை திக்கித் திக்கி அழுது கொண்டி ருந்தது. சில மணி நேரத்திற்கு முன்பு பிறந்த குழந்தையாகை யால் உடலெல்லாம் வழுவழுத் துக் கொண்டிருந்தது.

'பாவம் மச்சான்! பசி போலே இருக்கு' செல்லி குழந்தையை அணேத்து பாலூட்டத் தொடங் கினுள்.'

'என்னடி நிண்ட நிலேயிலே பிச் சைக்கு காசெறியிராப்போலே பாலேக் குடுத்துக் கொண்டிருக் காய்? புள்ளே திணறப் போகுது வந்து ஆறுதலாகஇருந்து குடன். செல்லி அப்படியே வந்து ஆலம ரத்துக்குக் கீழ் அமர்ந்து கொண் டாள்.மூக்கன் அவளுக்கு எதிரே வந்து உட்கார்ந்தான்.

'பாவம் மச்சான் அதிர்ஷடங் கெட்ட குழந்தை...'

'போடி புரியாதவளே!...' என் முன் மூக்கன்.

"அதிர்ஷடம் செய்த புள்ளே யெண்டு சொல்லடி, குப்பைத் தொட்டிக்குள்ளே போட்டவன் கழுத்தை நெரிச்சுக் கொல்லா மல் போட்டானே'. அதிர்ச்சி யோடு வாயைப் பிளந்தாள் செல்லி.

'அட சனியங்களா!... அப்படி யும் செய்யுங்களா?' மூக்கன் அலட்சியமாகச் சொன்னுன்.

'இதைவிடப் பெரிசாகவும் செய்யுங்களடி. அதுகள் பணக் காரர்களடி. சும்மாவும் இருக்க மாட்டுதுகள். கள்ளத்திலே பெத் தாலும் எங்களுக்குப் புள்ளே புள்ளேதான். அதுகளுக்கு அப் படியில்லேயடி. கௌரவம், மானம் எண்டு எதையாவது சொல்லிக் கொண்டு இப்படித் தான் குப்பைத் தொட்டிக்குள் ளேயும் கொல்லேப் புறத்திலேயும் போட்டு மூடிப்போட்டு நல்லது களேப்போல் வேஷம் போடுங் கள்!...'

'தூ' வென்று வெறுப்போடு காறித் துப்பினுள் செல்லி.

'மிருகங்கள்!...'

உலகம் விடிந்து கொண்டிருந் தது.

இந்தியப் பத்திரிகைபற்றி நோக்கு

# கொல்லையை ஒரு தடவை சுற்றினுர் சுப்பர்

பண்டிதரத்தினம் எஸ். சாமுவேல்

அண்மையில் ஒரு 'பென்னம் பெரிய விஷயம்' நடந்தேறி இருக்கிறது. 'சப்பச் சுப்பாள்' விஷயம் என்ருல் பேசாமல் இருக்கலாம். ஆனுல், இஃது ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகையே ஒரு கலக்குக் கலக்கிய விவகாரம்! ஈழத் தமிழ் இலக்கிய உலகின் தவ்வல்கள் தொடக்கம், தமிழ் இலக்கியத்துடன் 'தொடுப்பு' வைப்பதுகூட ஒழுக்கக் கேடானது என்று நினைக்கும் 'டமிலர்கள்' வரை டொன்டொன்ருகக் கருத்துக் குவியல்களை அள்ளி வீசிவிட்டார்களென்ருல் விவகாரத்தின் பென்னம் பெருப்பத்தை நீங்களும் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

'இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் சஞ்சிகைகள்மீது ஒருவித கட்டுப்பாடு விதிக்கப்படல் வேண்டும்' என்று தானும் ஒரு காலத்திலே சிறுகதை ஆசிரியனுக இருத்ததையும் ஒருவிதத்தில் வலியுறுத்தும் பாங்கில் 'இலங்கை வானெலி புகழ்' எச். எம். பி. முஹிதீன் அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தாலும் சமர்ப்பித்தார், வெடித்துக் கிளம்பியது பூதம்.

கலங்கிய குளத்திலே முதலில் தூண்டிலை வீசியவர் காயம் கண்ட இடத்தில் பிள்ளைப்பெறும் சுபாவத்தினரான டொமினிக் ஜீவா. இப்படிப்பட்ட விவகாரங்களில் முந்திரிக்கொட்டை போன்று முந்தாவிட்

டால், தன்னுடைய எழுத்தாளர் பவிசினைக் காப்பாற்ற முடியாது என்பதை அவர் அறிவார். 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' என்று ஒரு 'லேபி'ளை ஒரு காலத்திலே காவித் திரிந்தார். சங்கத்திற்கு இப்பொழுது மதிப்பில்லையோ, அன்றேல் சங்கத்தில் இவருக்கு மதிப்பில்லையோ என்ற கோத்திர விசாரனை நமக்குத் தேவையில்லை. ஆனால், அவர் இப்பொழுது கலை - இலக்கியப் பெரு மன்றம் என்ற புதிய 'லேபி'ளை வைத்துக் கொண்டுதான் தன்னுடைய 'யாவாரத்தை' நடத்துகிறார். அதன் ஏகபோகத் தலைவராகத் தன்னைக் கற்பித்துக் கொண்டு, இந்தியச் சஞ்சிகைகள்மீது கட்டுப்பாடா? முழுத்தடை விதி! எங்களுடைய அரசாங்கம் முழுத்தடை விதிக்கத்தான் போகிறது அப்பொழுதுதான் ஈழத்துத் தமிழ் இலக்கியம் 'கிசுகிசு' என்று வளரும், 'நானும் வெட்டுவெட்டென்று வெட்டித் தள்ளுவேன்' என்று 'கோபாவேஷத்துடன்' (அது என்ன வேஷம் என்பது அவருக்குத்தான் தெரியும்). குதித்து, சில எடுபிடி 'மைனர்'களையும் சாய்த்துக்கொண்டு கொழும்புக்கு வந்தார், அறிக்கைகள் விட்டார். பிரமுகர்களைச் சந்தித்தார். 'கல்கிதாசன்' என்ற புனைபெயரில் எழுதியும் கண்ணெடுத்துப் பார்க்காத பார்ப்பனக் கும்பல்மீது வஞ்சம் தீர்த்துக் கொண்டதாகத் திருப்தி அடைந்தார்!

டொமினிக் ஜீவா என்ற இந்த 'உசுக்குட்டி' இப்படி எல்லாம் குதித்தால் 'கோட்டை' விட்ட தளபதிகளும், 'ஒண்டுக்கிருந்து தமிழ் வளர்க்கும்' தளபதிகளும் சும்மா இருப்பார்களா? இப்படி ஒரு 'சான்ஸ்' வந்தால்தானே அவர்களுக்கும் 'ஓசி' விளம்பரம் கிடைக்கிறது. விளம்பரமின்றி அரசியல் 'யாவாரத்தை' நடத்த முடியாது என்ற உண்மையை அறிந்த அனுபவஸ்தர்கள் அவர்கள். "இந்தியப் பத்திரிகைகளுக்குத் தடையா? இது சிங்களவரின் சூழ்ச்சி. அறிவுப் பட்டினிபோட்டு நம்மைக் கொல்லப் பார்க்கிறார்களே" என்று தமது மார்பிலே 'தொம் தொம்' என்று குத்தி ஒப்பாரி வைத்தார்கள்.

அந்தக் குதிப்பினுலும், இந்த ஒப்பாரியினுலும் விவகாரம் மேல் மட்டத்தை அடைந்தது. இன்றைய அரசாங்கதில் 'ஒண்ணே ஒண்ணு; கண்ணே கண்ணு' என்று அங்கம் வகிக்கும் தமிழ் அமைச்சர் குமாரசூரியரிடம் விவகாரம் விடப்பட்டது. குமாரசூரியர் 'படீ'ரென்று குமாரசூரியர் கமிட்டியை நியமித்தார். கமிட்டியினர் இடைக்கால அறிக்கை, அறுதிச் சிபார்சு என்றெல்லாம் வெளியிடுவதற்கு அவர்கள் செய்த நேரச்செலவும், மூளைச் செலவும் அற்ப சொற்பமா? இத்தனை திமிலோக அமளிதுமளிகளுக்குப் பிறகு முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. தேவர்களும் அசுரர்களும் கடைந்தெடுத்த அமுதுபோல! சகலருடைய சுயம்புவான தமிழ்ப்பக்தியை திவ்விய திரட்டுப் போல!

## எழுத்தாளனும் அறிஞனும்

பிரபல ஆங்கில எழுத்தாளர் ஜார்ஜ் மூரும், அறிஞர் ஆலிவர் கெகார்டியும் ஒரு முறை புகையிரதத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது சந்திப்பு நிகழ்ந்தது. பொதுவாக இயற்கை காட்சிகளில் மனதை பறி கொடுக்கும் எழுத்தாளர் ஜார்ஜ் மூர் புகையிரதத்தின் யன்னலுக் கூடாக தெரிந்த காட்சிகளைக் கண்டு அபாரமாகப் புகழ்ந்தார். அப்போது வாய் விட்டு "ஆகா, எத்தனை அழகான காட்சிகள். இந்த இயற்கைக் காட்சிகளை எவ்வளவு நேரமென்ருலும் பார்த்துக் கொள்ளலாம். ஐந்து பவுணை கொடுத்தாலும் தகும்', என்ருர்.

அவ்வளவு தான் அறிஞரும் புகையிரதத்தின் அபாயச் சங்கிலியை இழுத்து விட்டு, "ஜார்ஜ்மூர்! ஐந்து நிமிடங்களல்ல பத்து நிமிடங்கள் என்ருலும் இதோ பார்த்துக் கொள்ளுங்கள். அத்தோடு அபாயச் சங்கிலியை இழுத்ததற்கான அபராதம் ஐந்து பவுணையும் செலுத்தி விடுங்கள் ...' என்ருர்.

'சிவபாலன்'

இந்த விவகாரத்தின் இலாப நட்டக் கணக்கினைப் பார்ப்போமே சுப்பர் தமது கொல்லையை ஒருதடவை சுற்றிவிட்டு, புறப்பட்ட இடத்திற்கே மீண்டுவிட்டார். முஹிதீனின் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்பிருந்த அதேநிலை நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுவிட்டது. ஒரு மாற்றமும் இல்லை. இடையில் நடந்தது என்ன? மாரித் தவளைகள் போல கத்தி, தமது அஞ்ஞானத்தை அம்மணமாக்கி, பழைய அழுக்குத் துணிகளைப் பகிரங்கமாக அலசிப் பார்க்காவிட்டால் ஈழத் தமிழரின் பண்பாடு என்னவது? இந்தப் பண்பாட்டினைச் செப்பமாக நிறுவியதுதான் மிச்சம்.

இத்தனை விவகாரங்களின் மத்தியிலே பண்டிதரத்தினம் சாமுவேல் வெட்டி வீழ்த்தியதும், கட்டி அடுக்கியதும் என்ன என்று கேட்கின்றீர்களா? இத்தனைப் பேச்சுகளுக்கு மத்தியிலே நான் மௌனம் சாதித்தேன். மௌனம் கலக நாஸ்தி என்பது எல்லோரும் அறிந்த சமாசாரம்.

[இக் கட்டுரையின் கருத்துக்கள் யாவற்றுக்கும் கட்டுரை எழுதியவரே பொறுப்பாளியாவர். நேயர்களிடமிருந்தும், இது பற்றிய கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.]

## பாரி(ஸ்)மாநகரம்

இங்குள்ள இந்திய மாணவர்கள் இந்திய மாளிகையில் வைத்து அளித்த வரவேற்பில் பாரிஸை, பாரிஸ் நகரென்று அழைக்க வில்லை. ''பாரிமாநகரம்'' என்றார்கள். பாரிஸ் நகரை - வரலாற்றுப் புகழ் பெற்ற ''பாரி'' மன்னனுடன் இணைத்துப் பேசினர். என் உடல் சிலிர்த்தது... வள்ளல் பாரியின் பெயருடன் பாரிஸை இணைத்துப் பேசியதை எண்ணி இறும்பூதெய்தினேன்.

முதல்வர்- கருணாநிதி

'சாஞ' எழுதிய

## "பண் சக பாடு - சமன் - பண்பாடு"

பண்— அமைவு; இசைப்பாட்டு; ஊழியம்; குதிரைக்கல்லணை;சீர்; செவ்வை; தகுதி; நிந்தை; பண்ணென்னேவல்; மகளிர் கூட்டம்.

பாடு— அனுபவிக்கை, இடம், உண்டாகுகை, உதயத்துக்கு ஏழாம் இடம், ஏழாம் வேற்றுமையுருபு, ஓசை, கடமை, குணம், கேடு, சுயகாரியம், நட்பு, பங்கம், படுதல், பாடன்னே வல், பெருமை, மலை, வருத்தம், விருத்தி, வேலை, சாவு, கேடு, மறைவு, முறைமை, செவ்வி, பயன், உலகவொ ழுக்கம்.

தமிழென்ற செம்மொழியின் தத்துவத்தை மேலே குறிப்பிட்ட இரு சொற்களின் கருத்துக்களிலிருந்து விளங்கிக்கொள்ள முடிகி றது. ''பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத். திருப்பிலேயிருந்து வையை ஏட்டிலே தவழ்ந்த பேதை, நெருப் பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோரென மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகிறாள்'' என்று, புலவர் தமிழ்த் தாயைப் போற்றியிருக்கிறார். அத்துணை வலிமை பெற்றது நமது தமிழ். (பொருப்பு, திருப்பு, நெருப்பு, மருப்பு என்ற எதுகைகளுக் கிணங்க, தமிழரை 'பருப்பு' என்றழைப்பது சாலச்சிறந்தது. வாழ்க தமிழினம்!)

விருந்தோம்பல் போன்று, எதற்கும் எவருக்கும் வளைந்து கொடுப்பது காற்றடிக்கும்போது சாய்வதும், நிமிருவதும் தமிழர் பண்பாடு என்ருல மிகையாகாது. தோன்ருமலும் மறையாமலும், தோன்றிய காலம் இன்னதென்று தோன்ருமலும், அன்றுதொட்டு இன்றுவரை அழிவில்லாதது, தளராது நாளுக்குநாள் வளர்ந்து நின்றுலவுவது தமிழ் மொழி. (ஆனல் இக் காலத்தில், தமிழ் அழியப் போகிறது, தமிழை வளர்க்க வேண்டும்



என்று ஒருசிலர் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிருர்கள். ஆம். இருக்கிருர்கள். இருந்துகொணடேயிருக்கட்டும். அதேபோல, தமிழும் இருக்கும்.)

'பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்க' என்று கூறுவதில், தென்னன் என்பது பாண்டியனைக் குறிக்கிறது. (தென்னன் என்பது இராவணனையும் இயமனையும் குறிக்குமொரு சொல் என்பதனையும் நாம் மறக்கக் கூடாது. பாண்டியனின் பிணைப்பை நாம் அறுத்துக்கொண்டபொழுதிலும், இராவணனுக்கும் இயமனுக்கும் இலங்கைவாழ் தமிழர் சொந்தமானவர்கள். அந்தப்பற்றை நாம் அறுக்க முடியாது.)

நிற்க, 'தமிழமு'தாசிரியர் என்னைச் சிக்கலில் விழுத்திய விஷயத்திற்கினி வருவோம். தென்னிந்தியப் பத்திரிகைகளைத் தணிக்கை செய்வதுதான் அந்த சிக்கலான விஷயம். (இந்த சிக்கலை நான் இரு பிரிவுகளாக வகுத்து இன்னும் ஒரு மாபெரும் சிக்கலைக் கிளப்பப் போகிறேன்: மன்னிக்க வேண்டும்)

வெளிநாடுகளிலிருந்து வரும் திரைப்படங்களைத் தணிக்கைசெய்ய வேண்டும் என்பதற்காக, கலாச்சாரப் பகுதியும் இலங்கைவாழ் மக்களும் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள் என்பது நீங்கள் அறிந்ததே. திரைப்படத் தயாரிப்பாளர் லெஸ்றர் பீரீஸ் அவர்களும், நடிகர் ஹென்றி ஜயசேன அவர்களும் இன்னும் பலரும் கலாச்சாரப் பகுதியின் கொள்கைக்கு எதிர்ப்பாக இருக்கிருர்கள்.

(வளர்ந்தோரும் இருக்கிறுர்கள், வருங்கால மன்னர்களாக வாழ்ந்து வரப்போகும் சிறுவர்களும் வாழ்ந்து வருகிறுர்கள். இந்த நாட்டிலே எந்தத்தராதரமுள்ள திரைப்படங்களை யார் யார் பார்ப்பதென்பதே முக்கிய பிரச்சனே.)

இந்தப் பிரச்சினைக்கு ஒரே வழிதான் இருக்கிறது. மாமிசம் சாப்பிடுவதை எடுத்துக் காட்டுவதற்காக, மாமிசம் சாப்பிட்டவர், எலும்பொன்றைக் கழுத்திற் கட்டிக்கொண்டு திரிவது தகாது. அதே போல், ஆபாசமான, விரசமான, கீழ்த்தரமான திரைப்படங்களைத் தடை செய்வது தகுந்தது. இதற்கு, தணிக்கை செய்யும் குழு, தராதரமுடையதாக அமையவேண்டும். சுயநலம் கருதாது பொதுநலம் கொண்டவர்கள் இருக்கவேண்டும். பெருந்தன்மை கொண்டவர்கள் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் இலங்கை வாழ் மக்களின் பண்பாடும் கலாச்சாரமும் நிலைத்து நிற்கும்.

முக்கியமாக, தென்னிந்தியத் திரைப்படங்களிற் பேசும் பேச்சுக்களையும், பாடல்களில் வரும் சில வசனங்களையும் சொற்களையும் தருகிறேன்.

பென்ஞகப் பிறந்தாள் (பெண்ணுகப் பிறந்தால்) இரக்கத்தானே வேண்டும் (இறக்கத்தானே வேண்டும்) இதை மரத்தல் தவராகும் (இதை மறத்தல் தவறுகும்) மலே பெய்கிறது (மழை பெய்கிறது) புளி பாய்கிறது. (புலி பாய்கிறது) உண்மை சொள்ள வேண்டும் (உண்மை சொல்ல வேண்டும்). நான் சொன்னவை யாவும் உண்மை. நான் மிகை படச் சொல்லவில்லை. (தென்னன் புகழிலே கிடந்த சங்கத் தமிழே தென்னவன் வாயிலிருந்து வருவதும், அதைக் கேட்டு ரசித்து நமது குழந்தைகளும், ஏன் பெரியோர்களும்தான் பின்பற்றிப் பேசுகிறுர்களே. ஆகையால்தான், இக்காலத்தில், சிலர் தமிழை

வளர்க்க வேண்டுமென்று அரும்பாடு படுகிருர்கள் என்பது என் கருத்து. உங்கள் கருத்து என்னவோ தெரியாது.)

இனி தென்னிந்தியப் பத்திரிகைகளுக்கு வருவோம். அங்கிருந்து வரும் கீழ்த்தரமான, விரசமான, ஆபாசமான பத்திரிகைகளேயும், சஞ்சிகைகளேயும் தடை செய்யத்தான் வேண்டும். (ஆனுல் இதைச் செய்வதற்கு முன், நமது நாட்டில் பிரசுரமாகும் இழிவான செய்தி களேத் தாங்கும் சில பத்திரிகைகளே முதலில் தடை செய்ய வேண்டும். ஒரேயொரு கேள்வி. அக்கரை பச்சையாக இருந்தால், இக்கரையும் பச்சையாக இருக்க வேண்டுமா? நமக்கென்ருெரு பண்பாடு இல்லேயா? இரண்டாம் கேள்வியைக் கேட்டதற்கு மன்னிக்க வேண்டும்.)

இவற்றை தடை செய்வதற்கு, திரைப்படக் குழு எவ்வகையில் அமையவேண்டுமோ, அதே போன்று, அப்பழுக்கற்ற குழுவினர் தொண்டாற்ற வேண்டும்.

இலக்கிய சஞ்சிகைகளே நான் வரவேற்கிறேன். எங்கள் மொழிக்கு இவை அவசியம் வேண்டியவை. அதோடு எங்கள் நாட்டில் எழுத்தில் வல்லுனர்கள் இருக்கிருர்கள்- ஓவியத்தில் வல்லுனர்கள் இருக்கிருர் கள். சிறந்த அச்சகங்கள் இருக்கின்றன. ஆனுல், 'ஒன்று சேர்தல்' இல்லே. பகைமை பொருமை போன்ற எமது முதிசமான பாடுகளே மறந்து பலதரப்பட்ட வல்லுனர்களும் ஒன்று சேர்ந்து தரமான இலக்கிய சஞ்சிகைகளே எமது நாட்டில் பிரசுரித்து வந்தால் தென்னிந்தியப் பத்திரிகைகளேயும் சஞ்சிகைகளேயும் தடை செய்யும் அவசியம் ஏற்படாது. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்றதுபோல் திரண்டெழுங்கள். எமது கலாச்சாரம் ஓங்கும். எமது பண்பாடு நிலேத்து நிற்கும். (இது எனது விருப்பம். செய்வது எமது விருப்பம்.)


எழுத்துலகச் சந்திப்பு.

## ''பாரிஸ், உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு எஸ். எம். கமாலுத்தீனின் ஒரு விரிவான கண்ணோட்டம்''

சந்திப்பு: சரவணையூர் மணிசேகரன்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்'' என்றார் அமரகவி பாரதி. அந்த இழந்தமிழின் இதத்தின் சுவைஞர்களாகி, ஏலவே தமிழாராய்ச்சி புரிந்த மேல்நாட்டவர் பலர். திராவிட ஒப்புலக்கணத்தில் ஆராய்ச்சி புரிந்த காடுவெல், வீரமாமுனிவர், போப்பையர் போன்ற அறிஞர்களைக் குறிப்பிடலாம். அதைத் தொடர்ந்து உலகத்தின் ஆங்காங்கு பகுதிகளில் தமிழ்மொழி பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்த ஆராய்ச்சியாளர்களையெல்லாம் ஒன்று சேர்த்து, கலந்துரைகள் மூலம் மேலும் பல ஆராய்ச்சிகள் புரிந்திடவும், வித்திடவுமே, 1964ம் ஆண்டு கீழ்த் தேய மொழிவல்லுனர்களின் மாநாட்டில் ''தமிழாராய்ச்சி மாநாடு'' மனை கோலியது.

அதன் பிரகாரம் முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு கோலாலம்பூரில் கோலாகலமாகவும், இரண்டாவது மாநாடு புகழ் பூத்த பூம்புகாரிலும், மூன்றாவது மாநாடு நாகரீகத்தின் பிறப்பிடமும், எழில் பூத்த நகருமான பாரிஸிலும் ஆடித்திங்கள் 15ம் திகதி தொடக்கம் 18ம் திகதி வரை நடந்தேறின. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து அன்னை மொழியாம் செந்தமிழில் பற்றுக்கொண்ட அறி ர் குழாம் கலந்து சிறப்பித்தனர். எமது இலங்கையின் சார்பில் பல்கலைக் கழகத்து விரிவுரையாளர்களான கலாநிதி கைலாசபதி, கலாநிதி வித்தியானந்தன், கொழும்பு பொது நூலக அதிபர் எஸ். எம். கமாலுத்தீன் ஆகியோர் பங்கு பற்றினர்.



திரு. எஸ். எம். கமாலுத்தீன் இலக்கிய உலகிற்கு புதியவரன்று. அவருடைய பிரயாண நூல்கள் ஈழத்து நவீன இலக்கியத்துக்கு வலுவூட்டிக் கொள்வன. அவர் சாகித்திய மண்டல உறுப்பினராக இருக்கும் போது 'செய்னம்பு நாச்சியார்' என்று வில்லுப் பாட்டை இஸ்லாமிய உலகிற்கு அறிமுகப்படுத்தியவரோடு, இஸ்லாமிய இலக்கியத்திலும் கலாச்சாரப் புரட்சிக்கும் வித்திட்டவர். அவர் பாரீஸிலிருந்து வந்ததும் சந்திப்பதற்காகச் சென்றேன். என்னை அகமகிழ்வாக வரவேற்றதோடு, என் கேள்விகளுக்கு பதில் சொன்னார் ஆற்றொழுக்குத் தமிழில்...

கே. நடந்து முடிந்த மூன்று மகாநாடுகளையும் ஒப்பு நோக்கும் போது பாரீஸ் மகாநாடு எப்படி அமைந்திருந்தது?

பாரீஸ் மகாநாடு கோலாலம்பூர், சென்னை மகாநாடுகளிலும் பார்க்க மாறுபட்டதாகவே அமைந்திருந்தது. மாநாட்டமைப்பிலும் வித்தியாசமிருந்தும் போக, தமிழாராய்ச்சியில் எதிர்காலத்தைப் பொறுத்த வரையில் சில முக்கியமான திட்டவட்டமான நடவடிக்கைகளுக்கும் இம் மாநாடு வழி கோலியது. இவ் வாண்டில் 'யுனெஸ்கோ' (ஐக்கிய நாடுகளின் கல்வி, கலாச்சார விஞ்ஞான நிறுவனம்) தமிழாராய்ச்சித் துறையில் உதவுவதற்கு முன் வந்திருப்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது. இந்த நிறுவனத்தில் நிர்வாக அவையில் தமிழ் மொழியின் சிறப்பையும் இம் மொழித்துறையில் ஆராய்ச்சிகள் நடாத்த வேண்டியதின் அவசியத்தையும் உணர்த்திய பெருமை நிறுவனத்தின் தற்கால நெறியாளர் திரு. ஆதிசேஷயா அவர்களைச் சாரும். அடுத்ததாக சொல்லக்கூடிய முக்கிய நிகழ்ச்சி, சென்னை மாநில அரசு தமிழாராய்ச்சிக்கென ஒரு நிலையத்தை அமைப்பதற்கான திட்டத்தை மேற்கொண்டுள்ளதாகும். இந்த நிலயத்தில் சிறப்பானதொரு நூலகமும், ஆய்வாளர்கள் தங்குவதற்கான வசதிகளும் இருக்கும். பிற நாடுகளிலிருந்துதமிழகத்துக்குவந்து ஆராய்ச்சி நடத்துவதற்கு 'யுனெஸ்கோ' நிறுவனம் புலமைப் பரிசில்கள் வழங்கவும் முன் வந்திருக்கிறது. மொத்தத்தில் பாரீஸ் மாநாடு உருப்படியான நடவடிக்கைகள் மற்ற மாநாடுகளிலும் பார்க்க எடுத்திருப்பது கண் கூடு.

கே. நவீன இலக்கியத்தைப் பற்றி அங்கு விவாதிக்கப் பட்டதா?

அங்கு விவாதிக்கப்பட்டதுண்டு. டாக்டர். 'ஆஷர்' அவர்கள் தற்காலத் தமிழ் இலக்கியத்தை பற்றிய மதிப்பீட்டுக் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார். அதில் பல முக்கிய வளர்ச்சித் துறை பற்றிக் குறிப்பிடும் போது, நவீன இலக்கியத்தில் விரிவான ஆய்வு நடத்துதல் அவசியம் என்று வற்புறுத்தியிருந்தார். அதாவது தற்கால இலக்கியத்தில் ஆரம்ப நிலை பற்றியும், விரிவான ஆய்வுக்கு இடமுண்டு என்றும் குறிப்பிட்டிருந்தார். மேலும் இந்த நவீன இலக்கிய வளர்ச்சிக்கு வழி கோலிய புதுமைப்பித்தன் போன்றவர்களைப் பற்றி விரிவான ஆராய்ச்சி செய்தல் அவசியம் என்றும், இன்று தமிழ் நாடகத் துறையில் போதிய வளர்ச்சி இல்லாமல் இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினர். தமிழில் வசனத்திலும் கவிதையிலும் எழுதப்பட்ட நாடக

நூல்களுக்கு குறைவில்லாதிருந்தும், நாவலிலக்கியம் அடைந்துள்ள நிலையை நாடகம் எட்டிக்கூடப் பார்க்க வில்லை என்றும் குறிப்பிட்டார். நாடக இலக்கியம் பற்றி சிந்திக்கும் போது சினிமாத் துறையையும் நாம் உள்ளக்கிடக்கையே மதிப்பீடு செய்ய வேண்டும்.

கே, மகாநாட்டில் தமிழ் மொழி எதிரொலித்ததா?

சர்வதேச மாநாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் சமகால மொழிபெயர்ப்புக்கள் மூலம் நிகழ்ந்து வருவது நாமறிந்த உண்மை. ஒரு மாநாட்டு மொழிபெயர்ப்பு சம்பந்தமான செலவுகள் கொஞ்சம் மேலதிகமாக இருக்கும். மேலும் மண்டப அமைப்பு அதற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். இந்த வாய்ப்பெல்லாம் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு இருக்கவில்லை. ஆனாலும் தமிழிலும் சிலர் உரையாற்றினர்கள் என்பதை குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும் தமிழாராய்ச்சித் துறையில் ஈடுபட்டுள்ள மேல் நாட்டு அறிஞர்கள் நாம் விரும்பும் அளவுக்கு பேசவேண்டுமென்று எதிர்பார்ப்பது எனக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஆனல் எதிர் காலத்திலே தமிழாராய்ச்சியை தமிழகத்தில் வந்திருந்து நிகழ்த்தும் போது அவர்களுள் பெரும்பாலோர் தமிழைப் பேசுவதற்கு கற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

கே. தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி அவர்களின் பேச்சும் மகாநாட்டின் ஒழுங்கமைப்பும் எப்படி அமைந்திருந்தது?

மகாநாட்டில் கலந்து கொண்ட முதல்வர் கருணாநிதி அவர்கள் மிகவும் முக்கியமான இரண்டொரு விஷயங்களைக் குறிப்பிட்டார்கள். இது விஞ்ஞானத்துறையில் தமிழ்வளர்ச்சி வேண்டப்படும் இக்காலகட்டத்திலே அவர் உதிர்த்துள்ள கருத்துக்கள் கவனிக்கத்தக்கதாகும்.

தமிழ்ச் சொல்லாக்கம்-இன்று தமிழ் மொழியில் புதுப்புதுக் கலைகளை ஆட்சி கொள்வதற்கான சொல்லாக்கம் துரிதமாக நடைபெற வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தியும், மேலும் மருத்துவம் போன்ற துறைகளிலே தமிழ் மொழி வளம் பெற வேண்டுமென்றும் குறிப்பிட்டார். தமிழகத்திலே தமிழ் வளர்ச்சிக்கான எல்லா முயற்சிகளுக்கும், எல்லாவிதமான உதவிகளும் தமது அரசு செய்யக் காத்திருப்பதாக அவர் அளித்த உறுதி மொழி மகாநாட்டில் பெரிதும் வரவேற்கப் பட்டிருந்தன. கருணாநிதியின் உரை தமிழில்தான் அமைந்திருந்தது. மகாநாட்டு நிகழ்ச்சிகள் நான்கு தினங்கள் நடைபெற்றன. 15ந் திகதி காலை

பெரும்பகுதி தொடக்க உரைகளாகவே இருந்தது. அன்று மாலையிலும் மற்றத் தினங்களிலும் கருத்தரங்கு பல தலைப்புகளின் கீழ் நடந்தது. மிகவும் பிரதான பிரிவுகள் பின்வருமாறு:

1. அகழ்வாராய்ச்சியும் சிலாசனங்களும்.
2. சங்க இலக்கியம்.
3. தமிழும் சமஸ்கிருதமும்.
4. தமிழகத்தின் வெளிநாட்டுத் தொடர்பு.
5. தமிழர் சமுதாயம்.
6. தற்காலத்தமிழர் இலக்கியம்.

இத்துறைகள் பற்றிய மதிப்பீட்டுக் கட்டுரைகளும், சிறப்புக் கட்டுரைகளும் படிக்கப் பட்டன.

கே. இது மகாநாட்டுக்கு அப்பாற்பட்ட கேள்வியென்று எண்ணுகிறேன். பாரீஸில் உள்ள பிரெஞ்சு நூல் நிலையத்தில் நடைபெற்ற தமிழ்ப் புத்தக கண்காட்சியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்வீர்களா?

பிரெஞ்சு நாட்டிற்கும் தமிழகத்திற்கும் நீண்ட காலமாக நெருங்கிய தொடர்புண்டு. வர்த்தகம் கருதி வந்த பிரெஞ்சுக் காரர்கள் தமிழ் மொழியோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள். அத்தோடு சமயப் பிரச்சாரமும் பெருமளவில் இடம் பெற்றுள்ளது. தமிழிலே, நூல்களை அச்சிடுவதிலும் பிரெஞ்சுக்காரர்கள் உற்சாகம் காட்டினார்கள். இந்த உண்மைகளெல்லாம் அந்த நூல் காட்சியில் வைக்கப்பட்டுள்ள நூல்களிலிருந்து தெளிவாயிற்று. பிரெஞ்சு-தமிழ் அகராதி, தமிழ்-பிரெஞ்சு அகராதிகள். எத்தனையோ அங்கு காணப்பட்டன. கிறிஸ்த்தவ வேத நூல்களின் மூலப்பதிப்புக்கள் அங்கே இருந்தன. அரசியல், நிர்வாக தொடர்பான தமிழ்ப் பத்திரங்களும் ஏடுகளும் பல பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. இவ்வளவெல்லாம் அந்த நூலகத்திலுள்ள நூல்களின் சிறுபகுதியாகும், தமிழாராய்ச்சியில் ஈடுபடுவோருக்கு அங்கே வளமான இலக்கியக் களஞ்சியம் ஒன்று கிடைக்கக் கூடியதாக இருப்பது பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.

கே. நான்காவது தமிழாராய்ச்சி மகாநாடு இலங்கையில் நடைபெறப் போகின்றது. அது எப்படி அமைய வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

மூன்று பெரும் மகாநாடுகள் வெளிநாடுகளில் நடந்தேறியுள்ளன. இலங்கை மக்களும் தங்கள் மத்தியிலே தாங்களும் நேரடித் தொடர்பு கொள்ளத்தக்க முறையில் நான்காவது தமிழாராய்ச்சி மகாநாடு இலங்கையில் நடைபெறுவதை வர

வேற்பார்கள் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகமில்லை.

இந்த மகாநாடு இலங்கையிலுள்ள தமிழ் ஆராய்ச்சியாளர்கள், தமிழ் எழுத்தாளர்கள், மற்றும் தமிழ் அபிமானிகள் அனைவருக்கும் உற்சாகத்தையும் புதிய உத்வேகத்தையும் ஊட்டக்கூடியதாக அமைய வேண்டும். இலங்கையில் தமிழ் மொழி பல வகைகளில் சிறப்பாக வளர்ச்சி அடைந்து வருகின்றதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். முக்கியமாக இன்று நவீன இலக்கியத் துறையிலே மிகவும் துரிதமான முன்னேற்றம் காணப்படுகின்றது. தமிழ் இலக்கியம் பிரதேச வாரியாக மதிப்பீடு செய்ய முற்படுபவர்கள் நிச்சயமான இந்த வளர்ச்சி நிலையைக் காண்பார்கள். இந்த வளர்ச்சித் திறனை அடுத்து நடக்கவிருக்கும் மகாநாட்டிலே பிரதிபலிக்கச் செய்யக் கூடியது இங்குள்ள ஆய்வாளர்களின் பணியும் கடமையுமாக இருக்க வேண்டும். இதுவே என் அவா. ●

சீனக் குட்டிக்கதை

## மனப் பார்வை

அவன் பணத்தைத் தொலைத்து விட்டான். அடுத்த வீட்டுக்காரன் திருடி விட்டதாக அவன் நினைத்தான். அடுத்த வீட்டுக்காரனை உன்னிப்பாகப் பார்த்தான்.

அவன் தோற்றம் நடவடிக்கைகள் அசைவுகள் எல்லாம் அவனைத் திருடனாகவே அவனுக்குக் காட்டின.

அந்தப் பணம் மூங்கில் குழாயில் பவுத்திரமாக இருப்பதைக் கண்டான்.
அப்பொழுது...

அடுத்த வீட்டுக் காரனை உன்னிப்பாகப் பார்த்தான். அவன் தோற்றம் நடவடிக்கைகள் அசைவுகள் எல்லாம் திருடனாகவே காட்டவில்லை.

தமிழில் **'பத்மன்'**

சிங்கள எழுத்தாளர்களுள், மிகப்பிரபல்யம் அடைந்து வரும் ஒருவர் அலன்சன் பியதாச. இவருடைய நான்கு நாவல்கள் பிரசுரமாகி வெளிவந்துள்ளன. ஜீவிதய (வாழ்வு) உருமக்கருய (மரபுரிமையுடைய போர்) சகோதரய (சகோதரர்கள்) ஐரு உதுமூனுது (சூரியன் உதயமாகாவிடில்) என்பவை அவை.

நெலும் பொக்குன (தாமரைத் தடாகம்) வசா மாமே (துஷ்ட மாமா) றட்டரன் (தங்கம்) என்பன அவருடைய சிறு கதைத் தொகுப்புகளாகும்.

சிங்களச் சிறுகதை

# பரிசு

அலன்சன் பியதாச

'ஏ தம்மா. இன்றைக்கு ஏதோ பெரிய யோசனையில் இருக்கிறாய்?'

பதினெட்டு வயதான பியசிறி தான் தனது தாயைப் பார்த்து இப்படிக் கேட்டான்.

'ஒன்றுமில்லையடா, இன்று அதிகாலையில் ஒரு கனவு கண்டேன். அது ஒரு அதிசயமான கனவு. நமது வீட்டின் பின்புறமுள்ள ஆறு பெரும் பிரவாகத்துடன் பெருக்கெடுத்துப் பாய்வது போலவும் அந்த ஆறு நம் வீட்டை மூழ்கடித்து விட்டது போலவும் கனவு கண்டேன்' என்றாள் தாய்.

'இது நல்ல கனவா? அல்லது கூடாத கனவா?' பியசிறி கனவு கண்ட தாயையே கேட்டான்.

நான் அறிந்த வரையில் இது நல்ல கனவுதான் அது, சா! அதோ நமது தபால்காரன் வருகிறான். கடிதம் ஏதாவது இருக்கின்றதா என்று கேற்றடிக்குப் போய்ப்பார். தபால்காரனுக்கும் வயசு போய்விட்டது. கேற்றடிக்கு வந்து தபால் வாங்குவதைத்தான் அவன் விரும்புவான்' என்றாள் அவள். பியசிறி உடனே கேற்றைநோக்கி விரைந்தான்,

'அம்மா! நீ கண்ட கனவு சரியாகப் போய்விட்டது. என்னை வேலைக்கு எடுத்துக் கொண்டு விட்டதாக இதோ கடிதம் வந்திருக்கிறது. பதுளைப் பகுதியில் உள்ள ஒரு தபால் கந்தோரில் என்னை வேலைக்கு போட்டிருக்கிறார்கள்.' கேற்றடியிலிருந்து திரும்பி வந்த பியசிறியின் வாயிலிருந்து ஆனந்தத்தில் வெடித்தன இவ் வார்த்தைகள். 'வருகிற மாதம் முதலாம் திகதி வேலையைப் பாரமெடுக்க அங்கே போக வேணும்' என்றான் அவன் சந்தோஷத்தில்.

சரி... போதும்.. எப்படி இருந்தாலும் பதுளை ரொம்பத் தூரத்திலிருக்கிறது என்று நினைக்கிறேன்...'

'ஆம் அம்மா. எனக்கு பதுளையைப் பற்றி பூமிசாஸ்திரத்தில் படித்தது நினைவிருக்கிறது. பதுளைக்கு அப்பால் ரயில் போகாது...'

'என்ன செய்கிறது? உனது தகப்பனாவது சுகமாக இருந்தால் உன்னை அங்கு போக விடமாட்டேன். சொன்ன சொல்லைக் கேட்டு உனது தகப்பனின் வைத்தியத் தொழிலை நீ பழகியிருந்தாலாவது இத்த நிலைமை ஒன்றும் வந்திருக்காது' சம்பாஷனைக்கு முத்தாப்பு வைத்தாள் தாய்.

இந்த சம்பாஷணை நடந்து சில வாரங்களின் பின் பியசிறி பதுளைப்பகுதியில் உள்ள அந்த தபால் கந்தோரில் தனது வேலையைப் பாரமெடுத்தான். வேலையைப் பாரமெடுத்தபின் சில மாதங்கள் தொடர்ந்து அங்கு வேலை செய்து கொண்டிருந்தான். ஒருநாள் அந்த தபால் கந்தோரின் தலைமை அதிகாரி பியசிறியை திடீரென அழைத்து 'கடமை பார்க்கும் நேரத்தில் நீ வேறு வேலைகள் பார்ப்பதை நான் அனுமதிக்க முடியாது. நீ வேலை நேரத்தில் கவிதைகள் புனைந்து கொண்டிருக்கிறாய் என்று கேள்விப்பட்டேன், ஜனங்கள் வந்து கவுண்டருக்கு முன்னால் குவிந்து நிற்கும் நேரத்தில் நீ பேப்பர்களுக்கு கதை, கட்டுரை எழுதும் வேலையில் இருக்கிறாயாமே! இப்படியான வேலைகள் எல்லாம் இங்கு கடமை பார்க்கும் நேரத்தில் செய்யக் கூடாது. விளங்குகிறதா? நான் தரும் கடைசி மன்னிப்பு இது. இதன் பிறகு இப்படியாக ஏதாவது நான் கேள்விப்பட்டால் நீபோய் நிரந்தரமாக வீட்டில் இருந்து கொள்ள வேண்டி வரும். அப்படி இருந்து கொண்டால் வேண்டிய மட்டும் எழுதிக் கொண்டிருக்கலாம்.' என்று பொரிந்து தள்ளிவிட்டார் அவர்!

தமது தலைமை அதிகாரி இவ்வாறு கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த பியசிறி பதில்

ஏதுவும் கூறமுயலவில்லை. எனினும், ஒரு கேள்வியை மாத்திரம் அவரிடம் அவன் கேட்டான். 'கொழும்புப் பகுதிக்கு எனக்கு இடமாற்றம் எடுக்க முடியுமா என்பது தெரியவில்லை. அப்படி ஏதாவது...?'

'கொழும்பு அல்ல...நீ எங்கு மாறிப்போனாலும் எனக்குக் காரியமில்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன். இந்தக் கந்தோரில் நீ இருக்கும் வரை கந்தோர் நேரத்தில் கடமையைப்பார்ப்பதை விட்டுவிட்டு வேறு வேலை பார்க்கக் கூடாது தெரியுமா?' இவ்வாறு கூறியவாறே அந்த அதிகாரி பியசிறியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'நல்லது நான் இதற்குப் பிறகு ஒரு போதும் இப்படி நடக்கமாட்டேன்' பியசிறி வாக்குறுதி அளித்தான்.

பியசிறி திரும்பி வந்து தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டு யோசனை செய்ய ஆரம்பித்து விட்டான். அச்சமயம் அக் கந்தோரில் அதிக காலமாக கடமை பார்த்துக் கொண்டிருக்கும் சோமதாச என்ற பியோன் மெல்ல பியசிறிக்கு அருகில் வந்து அவன் காதடியில் மெதுவாக ஏதோ குசுகுசுத்தான். 'உங்களுக்கு அந்தப் பெரியவர் என்ன சொன்னார்?' என்று அவன் கேட்டான்.

'தெரியாதா வேறு நாட்களில் சொல்வதைத்தான் சொன்னார். உத்தியோக நேரத்தில் வேறு வேலை பார்க்கக் கூடாதாம், எனக்கு கொழும்புக்கு மாற்றலாகிப் போக சர்ந்தப்பம் கிடைத்தால் இந்தக் கரச்சல் ஒன்றும் இருக்காது' என்றான் பியசிறி.

'அது அவ்வளவு இலேசான காரியமல்ல.. நானும் இக் கந்தோருக்கு வேலைக்கு வந்து மூன்று வருடமாகிறது. உங்களுக்கு இடமாற்றம் கிடைப்பது எனக்கு இடமாற்றம் வந்த பிறகுதானே' என்றான் சோமதாச.

'அப்படியென்றால் இடமாற்றம் கிடைக்க எவ்வளவு காலம் செல்லும். பியசிறி' கேட்டான்.

'குறைந்தது நாலுவருடமாவது இங்கு இருக்க வேண்டி வரும். சோமதாச பதில் சொன்னான்.

இச் சம்பவம் நடந்து சுமார் மூன்று மாதங்கள் சென்றிருக்கும். ஒருநாள் பியசிறி தனது கவுண்டருக்கு அருகில் அமர்ந்து கொண்டு சோமதாசாவுடன் கதைத்துக் கொண்டிருந்தான். தபால் கந்தோர் அதிபர் தூரத்தில் தமது ஆசனத்தில் அமர்ந்திருந்தார். 'ஏன் நீங்கள் அந்தப் பெரியவருடன் கதைத்துக்

கொள்வதில்லையா?' என்று சோமதாசா பியசிறியைக் கேட்டான்.

'இல்லை... நான் இந்தக் கந்தோரை விட்டு மாறிப்போகும் வரையும் அவருடன் கதைக்க மாட்டேன். நான் இப்பொழுது கொஞ்சக் காலமாக கந்தோர் நேரத்தில் எனது சொந்த வேலைகள் எதையும் பார்ப்பதில்லை. அப்படி இருந்தும் அவர் பழைய கோபத்தில் என்னை ஏசிக் கொண்டிருக்கிறார்' என்றான் பியசிறி.

'அது எனக்குத் தெரிந்துதான் இருக்கிறது. உத்தியோகம் என்றால் வேலை செய்கிறது என்பது அர்த்தமல்ல. பந்தம்பிடிப்பதுதான் அதன் அர்த்தம்' என்றான் சோமதாச.

'எனக்கு விரைவில் இடமாற்றம் கிடைக்குமென்றே நினைக்கிறேன். எனது நிலைமையை விளக்கி எனது நண்பனொருவனுக்கு கடிதமொன்று எழுதியிருக்கிறேன். அவன் திறைசேரியில் இப்பொழுது வேலைபார்க்கிறான். பாடசாலையில் என்னுடன் ஒன்றாகப் படித்த அவனுக்கு நான் இலக்கியத் துறையில் அதிகம் முயற்சி எடுத்து வந்தது நன்கு தெரியும்.' என்று முடித்தான் பியசிறி.

இதற்கு சில மாதங்களின் பின் பியசிறிக்கு கொழும்பு பிரதம தபால் கந்தோருக்கு இடமாற்றம் கிடைத்தது. போகிறேன் என்றுகூட அந்த தலைமை அதிகாரிக்குச் சொல்லாமல் அவன் கொழும்புக்கு வந்து சேர்ந்தான்.

பியசிறி கொழும்புக்கு வேலை பார்க்க வந்து சுமார் ஒரு வருடம் கழிந்து விட்டது. இன்னும் பதுளைப் பகுதியில் உள்ள அந்த தபால் கந்தோரில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அந்த தலைமை அதிகாரி, கொழும்பிலுள்ள பெண்கள் கல்லூரி ஒன்றில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் தனது மகளைப் பார்ப்பதற்காக ஒரு நாள் கொழும்புக்கு வந்தார்.

'அப்பா! நீங்கள் வந்த நேரம் நல்ல நேரமாய்ப் போய்விட்டது. முக்கியமாக இன்று இங்கு ஒரு கொண்டாட்டம் நடக்கிறது. அதற்கு நீங்களும் என்னுடன் வந்தால் எவ்வளவோ நல்லதாயிருக்கும்! வருகிறீர்களா அப்பா!' என்று கொழும்புக்கு வந்த அவரை அவர் ஆசைமகள் ஸாமா கேட்டாள்.

'அது என்ன கொண்டாட்டம்? என்றார் தந்தை.

'என்னுடன் ஹாஸ்ட்டலில் இருக்கும் இந்திராணியின் அண்ணனுக்கு இந்த வருடச் சிறந்த புத்தகத்துக்கான பரிசு கிடைத்திருக்கிறது அப்பா.

அதற்காக அவர்களின் வீட்டில் சிறிய விருந்து வைபவம் ஒன்றும் நடத்துகிருர்கள்' என்ருள் ஸாமா.

'நீ சொல்லும் இந்திராணியின் அண்ணனுடைய பெயர் என்ன ஸாமா?' தந்தை கேட்டார்.

சோமச்சந்திர அமரபந்து. அழகான பெயர் இல்லையா அப்பா?' என்ருள் ஸாமா.

'இப்படி ஒரு பெயரை நான் கேள்விப்படவே இல்லையே.'

'சரி அங்கு போக ஆயத்தமாயிரு. இதனுல் மேலதிகமாக ஒருநாள் இங்கு தங்க வேண்டி இருக்கிறது...ம் என்ன செய்வது?' என்று புன்சிரிப்புடன் அலுத்துக் கொண்டார்.

அந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஸாமாவும் தந்தையும் வந்து சேர்ந்த போது அந்த வீட்டில் பெருந்திரளான விருந்தினர்கள் குழுமியிருந்தார்கள். 'வாருங்கள் அப்பா. முதலில் இந்திராணியை அறிமுகப்படுத்த வேண்டும்' என்று ஸாமா அழைத்துச் சென்ருள்.

'அப்பா, இவதான் இந்திராணி, இது இந்திராணியின் அம்மா, இங்கே இவர்தான் புத்தகத்துக்கான பரிசு பெற்ற இந்திராணியின் சகோதரர்... சோமச்சந்திர அமரபந்து!'

'சோமச்சந்திர அமரபந்து அப்படி யார் இங்கே இருக்கிருர்கள்? கந்தோரில் வேலை செய்த பியசிறி அல்லவா?' ஆச்சரியத்தில் இருந்து விடுபடாமலே ஸாமாவின் தந்தை சொன்னுர்.

'ஆம். அது நான்தான். நான் எழுத்துத்துறையில் உபயோகிப்பது சோமசந்திர அமரபந்து என்ற பெயரை. தாங்கள் இன்று இங்கு வந்தது எனக்குப் பெரிய சந்தோஷம்' என்ருன் பியசிறி.

விருந்து நடந்து கொண்டிருந்தது. மற்றவர்கள் உல்லாசமாக தின்று குடித்துக் கொண்டிருந்த சமயத்தில் ஸாமாவின் தந்தை அவசர அவசரமாக எதை எதையோ எடுத்துச் சாப்பிட்டு தோடம்பழரசம் கொஞ்சம் பருகிவிட்டு எழுந்தார்.

'அப்பா! இங்கிருந்து புறப்பட்டுப் போக ஏன் இவ்வளவு அவசரப்படுகிறீர்கள்?' என்று கேட்டாள் ஸாமா.

'நீ வா. அதுபற்றி பிறகு உனக்குச் சொல்கிறேன்' என்ருர் அவளின் தந்தை.

[யாவும் கற்பனை[



## காவிய புருஷன்

உயிர்ப்   பலி   வேண்டுமாகில்,
உண்மையை   எமக்குச்   சொல்லும்!
ஆயிரம்   உயிர்கள்   இந்தா,
அராபிய   நாட்டு   வீர,
வீரனும்   'நர்ஸர்'   'கோ'வை
மீளவே   தருவீரா   கில்....
ஏலவே   போன்று   எகிப்தை,
இருளவா   செய்தாய்   கூற்றே!
கால   வெள்ள   மதில்
காவிய   புருஷ   னுகும்,
நாஸரின்   கொள்கை   என்றும்,
நானிலம்   வெல்லும்   காண்மின்!

With the Best Compliments

From

V

Vijaya Traders

84, Old moor Street,

Colombo.

TAMILAMUDU October, November, December 1970.
Registered as a news paper in Ceylon.

*With the Best Compliments*

**T. S. AIYATHURAI NADAR & Co**

Exporters & Importers

9, 13, Maliban Street,

Colombo-11.

Tele { Phone: 22147
Grams: "EVERSHINE"

101, வேக்கந்தை வீதி, கொழும்பு-2ல் வசிப்பவரான சி. மகாலிங்கம் அவர்களால், கொழும்பு வாசகர் பேரவைக்காக, கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிட்டுப் பிரசுரிக்கப் பட்டது. உதவிக் கௌரவ ஆசிரியர் பா. சிவபாலன்.